REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper

மின்னிதழ்
2024 செப்டெம்பர் 7 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்
92 ANNIVERSARY

வரு. 92 இல. 214 | Saturday 07, September, 2024 | 11 பக்கங்கள் | 50/-

மின்சாரம், எரிபொருள் விநியோகம்

## அத்தியாவசிய சேவைகளாக ஜனாதிபதியினால் அறிவிப்பு



மின்சார விநியோகம் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட சேவைகள், பெற்றோலிய உற்பத்தி மற்றும் எரிபொருள் விநியோகம் அல்லது விநியோகம்

06

சுங்க வருமானத்துறை வரலாற்றில் முதற்தடவையாக

# சுங்கத் திணைக்களத்துக்கு ஒரு இலட்சம் கோடி ரூபா இலாபம்

## 2024ஆம் ஆண்டுக்கான IMF இன் வருவாய் இலக்கை 04 மாதங்களில் எட்ட முடியும்

### ஜனாதிபதி மற்றும் இராஜாங்க அமைச்சரின் வழிகாட்டல் முக்கியமானது

### சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சரத் நோனிஸ் தெரிவிப்பு

எந்தவொரு தரப்புக்கும் அடிபணியாமல் சுயாதீனமாக செயற்பட இலங்கை சுங்க திணைக்களத்தின் கட்டுப்பாட்டு அதிகார சபைக்கும் அதன் அதிகாரிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கியதன் மூலம் வரலாற்றில் முதற் தடவையாக இவ்வருடத்தின் 08 மாதங்களில் (1,000 பில்லியன்) ஒரு இலட்சம் கோடி ரூபாவை சுங்க திணைக்களம் வருமானமாக ஈட்ட முடிந்துள்ளதாக சுங்கப் பணிப்பாளர் நாயகம் சரத் நோனிஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்காக சர்வதேச நாணய நிதியம் 1,534 பில்லியன் ரூபாவை வருமான இலக்காக நிர்ணயித்துள்ளது. ஆனால், 2024ஆம் ஆண்டின் 08 மாத நிறைவில் 1,000 பில்லியன் வருமான இலக்கை எட்டியிருப்பதால், வருடத்துக்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடுத்த 04 மாதங்களில் எட்ட முடியுமென சரத் நோனிஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வரலாற்றில் இதற்கு முன்னர் 2023 ஆம் ஆண்டு அதிக வருமானம் கிடைத்ததாகவும், அந்த வருடத்தின் மொத்த சுங்க வருமானம் 975 பில்லியன் ரூபாய் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதுவரையில் மொத்த சுங்க வருமானத்தில் 25 சதவீதம் முதல் 30 சதவீதம் வாகன இறக்குமதியில் பதிவு செய்யப்படுமெனவும், இந்த இரண்டு வருடங்களிலும் வாகனங்கள் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டதால் அந்த எண்ணிக்கை 06 சதவீதத்துக்கும் குறைவாக இருப்பதாகவும் சரத் நோனிஸ் மேலும் சுட்டிக்காட்டினார்.

நிதி அமைச்சரென்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இராஜாங்க அமைச்சர்களான ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ஷெஹான் சேமசிங்க ஆகியோரின் தலைமைத்துவமும், சுதந்திரமாக செயலாற்ற கிடைத்தமையுமே இந்த இலக்கை அடைய முடிந்துள்ளதாக சுங்கப் பணிப்பாளர் தெரிவித்தார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில், சுங்கத் திணைக்களத்தில் பல சாதகமான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. மேலும், அனைத்து அதிகாரிகளுக்கும் புதிய முறைகள் மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகள் மூலம் அவர்களின் செயற்பாட்டை எளிதாக்க முடிந்ததென்றும் அவர் தெரிவித்தார்.

சுங்கக் கட்டமைப்புக்குள் காணப்பட்ட மோசடி மற்றும் ஊழலை ஒழிப்பதற்கும், கடத்தலை முற்றாக நிறுத்துவதற்கும் சுங்க ஊழியர்கள் வழங்கிய பங்களிப்பும் பெரும் உதவியாக அமைந்திருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

06

## ஊவா மாகாணத்தின் ஆளுநராக அநுர விதானகமகே நியமனம்



ஊவா மாகாணத்தின் ஆளுநராக அநுர விதானகமகே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார். ஊவா மாகாண ஆளுநராக இருந்த ஏ.ஜே.எம். முசம்மில் தனது பதவியை இராஜினாமாச் செய்ததையடுத்து உடனடியாக அமுலுக்கு வரும் வகையில்,

06

## மார்ச் 12 அமைப்பின் ஏற்பாட்டில் ஜனாதிபதி வேட்பாளர் விவாதம்

### இன்று நாமல், சஜித், திலித், அரியம் பங்கேற்பு

மார்ச் 12 அமைப்பின் ஏற்பாட்டில் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கான விவாதத் தொடரின் முதலாவது நிகழ்வு இன்று (07) பிற்பகல்

06



## மாற்றத்தை விரும்பும் தென்னிலங்கை மக்களுக்கு எதிராகச் சென்றால்...!

### யாழ். மக்கள் மத்தியில் மிரட்டும் தொனியில் அநுர உரை



மாற்றத்துக்காக தென்னிலங்கை ஒன்று திரண்டுள்ள வேளையில் அந்த மாற்றத்துக்கு எதிரானவர்களாக நீங்கள் மாறினால் தெற்கு மக்கள் மனதில் எவ்வாறான நிலை உருவாகுமென்பதை வடபகுதி தமிழ் மக்கள் நினைத்து பார்க்க வேண்டுமென தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதித் தேர்தல் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்த அநுரகுமார திசாநாயக்க மேலும் தெரிவிக்கையில்,

இந்த மாற்றத்துக்கு எதிரானவர்களாக நீங்கள் கருதப்படுவீர்கள். மாற்றத்துக்கு எதிரானவர்கள்

06

முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில்

## "ரணிலை அறிந்து கொள்வோம்" நாடு முழுவதும் பிரசார நிகழ்வு

### இன்று 07 ஆம் திகதி முதல் ஆரம்பம்

சுயேட்சை வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் நோக்கில் "ரணிலை அறிந்து கொள்வோம்" எனும் பிரசார நிகழ்ச்சி நாடளாவிய ரீதியில் இன்று (07) காலை 8.00 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

09 மாகாணங்கள், 160 தேர்தல் தொகுதிகள், 341 உள்ளூராட்சி மன்றங்கள், 4,984 வட்டாரங்கள், 14,026 கிராமசேவகர் பிரிவுகள் மற்றும் 53,896 கிராம வீதிகளை உள்ளடக்கியதாக இந்த நிகழ்ச்சி முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின்

06

தேர்தலில் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்காத

## அமைச்சர்கள், எம்.பிக்களை வெளியேறுமாறு அறிவுறுத்து

### அரசியல் வட்டாரங்களில் தகவல் கசிவு

ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்காத அரசாங்க கட்சியை பெயரளவில் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களையும் வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் அமைச்சர்கள் உள்ளிட்ட பல கட்சி அமைப்புக்களின் கோரிக்கையை கருத்திற்கொண்டே இந்த தீர்மானத்தை ஜனாதிபதி மேற்கொண்டுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

தீர்மானமிக்க இந்த தருணத்தில் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்காதவர்களை அரசாங்கம் என்ற பெயரில் வைத்துக் கொள்வதால் எவ்வித பயனுமில்லை.

06

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

## நுவரெலியா மாவட்டத்தில் 85 வீத வாக்குகளை பெறுவார்

எஸ்.பி.திசாநாயக்க



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நுவரெலியா மாவட்டத்தில் 85 சதவீத வாக்குகளை பெற்றுக்கொள்வாரென பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார். நுவரெலியா பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்றபோது

06

## முல்லைத்தீவில் நிலக்கண்ணி வெடித்து நான்கு பேர் காயம்

முல்லைத்தீவு மாங்குளம் துணுக்காய் பிரதேசத்தில் நிலக்கண்ணி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நான்கு பெண்கள் கண்ணிவெடி வெடித்து காயமடைந்துள்ளனர். வட மாகாணத்தில் கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சர்வதேச அமைப்பில் பணியாற்றும் நான்கு பெண்களே இவ்வாறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

காயமடைந்த பெண்கள் துணுக்காய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு காயமடைந்த பெண்களில் இரு பெண்கள் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கும் துணுக்காய் பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தேசபந்து தென்னகோனுக்கு எதிரான இடைக்கால உத்தரவு

### நீக்குமாறு 04 தேரர்கள் மனு தாக்கல்



தேசபந்து தென்னகோன் பொலிஸ் மாஅதிபராக கடமையாற்றுவதைத் தடைசெய்து உயர் நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவை நீக்கக்கோரி பெல்லன்வில ரஜமஹா விஹாராதிபதி கலாநிதி பெல்லன்வில தர்மரத்ன தேரர் உள்ளிட்ட மூன்று

06

## வங்குரோத்தான நாட்டை ஒன்றரை வருடத்தில் மீட்டு ரணில் சாதனை



ஒன்றரை வருடத்தில் உலகில் எந்த நாடும் வங்குரோத்து நிலையிலிருந்து மீளவில்லை. உலக வரலாற்றில் அந்த சாதனையை படைத்த ஒரேயொரு தலைவர் ரணில் விக்கிரமசிங்க எனவும் இது கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற வேண்டிய ஒரு விடயமெனவும் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மத்துகமவில் 'இயலும் ஸ்ரீலங்கா' பேரணியில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை சுட்டிக்காட்டியுள்ளார்.

06



03

### சஜித்துக்கு தமிழரசு கட்சி ஆதரவு வழங்கவில்லை

சுமந்திரன் அணி மட்டுமே ஆதரவு



03

### சட்டத்தின் ஆட்சியை பாதுகாத்து நாட்டை கட்டியெழுப்ப வேண்டும்

மக்கள் சரியான தீர்மானம் எடுப்பது அவசியம்



03

13 ஆவது திருத்தத்தை முழுமையாக

### நடைமுறைப்படுத்துவதே சஜித் வழங்கிய உத்தரவாதம்

சைபர் குற்ற முகாமில் மீட்கப்பட்ட

## 20 இலங்கையர்களும் நேற்று மியன்மாரிலிருந்து நாடு திரும்பினர்



மியன்மாரில் இணையக்குற்ற முகாமிலிருந்து மீட்கப்பட்ட 20 இலங்கையர் நேற்று (06) காலை நாட்டை வந்தடைந்தனர்.

மியன்மாரின் மியாவாடி பகுதியில் இணையக் குற்ற முகாம்களில் பிணைக் கைதிகளாக இருந்த மேலும் 20 இலங்கை பிரஜைகள் மீட்கப்பட்டதாக இலங்கையின் வெளியுறவுத் துறை அமைச்சு கடந்த ஒகஸ்ட் மாதம் 15 ஆம்

06

13 ஆவதை அமுல்படுத்த இணக்கம்

## சஜித்துடன் கூட்டுச் சேர்ந்துள்ள ஹக்கீம், ரிஷாத் பதிலளிக்க வேண்டும்

### உலமா கட்சி தலைவர் வலியுறுத்து



அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக சஜித் பிரேமதாச வாக்குறுதியளித்துள்ளதாக சிறிதரனின் கேள்விக்கு மனோ கணேசன் பதிலளித்துள்ளார். இதற்கான தெளிவான பதிலை சஜித்துடனுள்ள ரவூப்

06

'அர்த்தமுள்ள பிரஜைகள்':

## திலகரின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று நுவரெலியாவில் வெளியீடு



மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் ஜனாதிபதி வேட்பாளருமான மயில்வாகனம் திலகராஜாவின் தேர்தல் கொள்கைப் பிரகடனம் இன்று 07ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நுவரெலியாவில் வெளியிடப்படுகிறது.

நுவரெலியா, வட்டகொடை, மடகொம்பரை, புதுக்காடு தோட்டத்தின் ஐந்தாம் இலக்க லயன் அறையில் இந்த விஞ்ஞாபனம் வெளியிடப்படவுள்ளதாக அரங்கத்தின் தேசிய அமைப்பாளர்

06

கொழும்பு துறைமுகத்தில்

## மிகப்பெரிய 'EVER ARM' கொள்கலன் சரக்கு கப்பல்



உலகின் மிகப் பெரிய கொள்கலன் சரக்குக் கப்பலான EVER ARM கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்துக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை துறைமுக அதிகார சபை தெரிவித்துள்ளது.

400 மீற்றர் நீளம் கொண்ட EVER ARM சுமார் 24,000 TEU (20 அடி கொள்கலன்) சுமக்கக்

06

# கொழும்பு துறைமுக நகருக்குள் 'The Mall' Duty free Complex ஜனாதிபதியால் திறப்பு



கொழும்பு துறைமுக நகருக்குள் நிர்மாணிக்கப்பட்ட 'The Mall' வரியில்லா வர்த்தக தொகுதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நேற்று முன்தினம் (05) பிற்பகல் திறந்துவைக்கப்பட்டது.

இந்த வர்த்தகத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டிருக்கும் வரியில்லா வர்த்தக தொகுதி, விற்பனை நிலையங்கள், உணவகங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

*One World, China Duty Free Group (CDFG)* மற்றும் *Flamingo* ஆகியவை இந்த வர்த்தகத் தொகுதியில் தங்கள் செயற்பாடுகளைத் ஆரம்பித்திருப்பதன் மூலம், கொழும்பு துறைமுக நகரம், பிராந்தியத்தில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகத் தொகுதியாக பரிணமிக்கும்.

பெயர் பலகையை திரைநீக்கம் செய்து, வணிக வளாகத்தை திறந்து வைத்த ஜனாதிபதி, கண்காணிப்பு பயணத்தையும் மேற்கொண்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி, துறைமுக நகரை இவ்வாறு அபிவிருத்தி செய்ய முடியுமென இரண்டு வருடங்களுக்கு முன்னர் எவரும் எதிர்பார்க்கவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் அரசாங்கம் நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தியமையினால் இன்று துறைமுக நகரின் நிதிச் செயற்பாடுகளை தொடங்க முடிந்துள்ளதாக தெரிவித்தார்.

மேலும், சுமார் 100 நிறுவனங்கள் துறைமுக நகரம் குறித்து கவனம் செலுத்தியுள்ளன. அவற்றில் 74 நிறுவனங்கள் இந்த வருட இறுதிக்குள் துறைமுக நகரத்தில் முதலீடு செய்யவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வெளிநாட்டுக் கடன் வழங்குனர்களுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் திருத்தமின்றி அமுல்படுத்தப்பட்டால் நாட்டுக்கு சிறந்த எதிர்காலம் கிடைக்குமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

இன்று துறைமுக நகரத்தில் இந்த வரியில்லா வர்த்தக தொகுதி திறந்து வைக்கப்பட்டுள்ளமை மிக முக்கியமானதாகும். இலங்கையின் சுற்றுலாத்துறை உலக அளவில் பிரசித்தம் பெற்றுள்ளது. இந்த வர்த்தகக் கட்டிட தொகுதியினால் சுற்றுலாப் பயணிகளும் இங்கு வருகைத் தருவார்கள். அவர்களுக்குத் தேவையான பொருட்கள் கிடைக்கும் வகையில் வணிக வளாகங்களை நிர்மாணித்து இந்த துறைமுக நகரத்தை மேம்படுத்தியுள்ளோம்.



இது துறைமுக நகரத்தின் ஆரம்பமாக மட்டுமே அமையும்.

துறைமுக நகரை இவ்வாறு அபிவிருத்தி செய்ய முடியும் என்ற நம்பிக்கை இரண்டு வருடங்களுக்கு முன்னர் எமக்கு இருக்கவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தியதன் காரணமாகவே இன்று இப்பணியை செய்ய முடிந்துள்ளது.சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் கடன் வழங்கிய 18 நாடுகளுடன் இந்த வேலைத்திட்டத்தை தொடர்வதற்கு நாம் உடன்படிக்கை செய்துள்ளோம்.

அந்த ஒப்பந்தங்களை மாற்றாமல் தொடர்ச்சியாக கொண்டுச் சென்றால் இலங்கைக்கு நல்ல எதிர்காலம் கிட்டும். அந்த உடன்படிக்கைகளில் திருத்தம் செய்ய முற்பட்டால், எதிர்காலம் கேள்விக்குறியாகும். குறிப்பாக 100 நிறுவனங்கள் இன்று துறைமுக நகரம் குறித்து கவனம் செலுத்தியுள்ளன. அதில் 74 நிறுவனங்கள் இந்த வருட இறுதிக்குள் இலங்கையில் முதலீடு செய்யவுள்ளன.

மேலும், கொழும்பு கோட்டையில் புதிய சுற்றுலா வலயத்தை ஆரம்பிக்க உள்ளோம். இதனால், இப்பகுதிகளுக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

பொலிஸ் தலைமையகம் இடம் மாற்றப்பட்டுள்ளது. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சும் புதிய கட்டிடத்திற்கு மாறுகிறது. குடியரசு சதுகத்தையும் புதுப்பித்து, அந்தப் பகுதியை சுற்றுலா வலயமாக மாற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேநேரம், பழைய தபால் நிலைய கட்டடத்தை சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு பயன்படுத்த முடியும்.

பழைய துறைமுகம் மற்றும் அதன் இறங்குதுறை மற்றும் பழைய சுங்க கட்டிடம் உள்ளிட்ட அனைத்தையும் சுற்றுலா அபிவிருத்திக்கு பயன்படுத்த முடியும்.

கடற்படைத் தலைமையகம் தற்போது அக்குரேகொடைக்கு மாற்றப்பட்டுள்ளதால், பழைய இடத்தில் புதிய ஹோட்டல்களை அமைக்கலாம்.

தற்போதுள்ள ஜனாதிபதி மாளிகையை சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு பயன்படுத்தி விரிவான சுற்றுலாத்துறையை உருவாக்க திட்டமிட்டிருக்கிறோம். இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய சுற்றுலா பயணிகளை அதிக அளவில் அழைத்து வர வேண்டும். அதன் மூலம் ஈட்டும் வருமானத்தையும் அதிகரிக்க வேண்டும்.

இரண்டு வருடங்களில் இப்படியொரு வணிக வளாகத்தை ஆரம்பிக்க முடிந்ததற்கு பெருமைப்பட வேண்டும். 7000 சதுர மீற்றருக்குள் 03 உலகப் புகழ்பெற்ற நிறுவனங்கள் இங்கு நிறுவப்பட்டுள்ளன.

இன்னும் பல நிறுவனங்கள் வர காத்திருக்கின்றன. நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை பாதுகாத்து முன்னேறி இந்த துறைமுக நகரை உலகப்புகழ் பெற்ற மையமாக மாற்றுவோம் என்றார்.








# பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி கூட்டணி உதயம்



















தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2024 செப்டெம்பர் 7 சனிக்கிழமை
தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 04.47
ளுஹர் - 12.11
அஸர் - 03.13
மஃரிப் - 06.16
இஷா - 07.27

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆவணி 22
ராகுகாலம் : காலை : 9.04 - 10.34வரை
சுபநேரம் : மாலை : 3.04 - 4.34வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# புதிய மேல்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் பதவிப்பிரமாணம்






நான்கு புதிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் நேற்று (06) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

மேல் நீதிமன்ற நீதிபதிகளான கே. எம். ஜி. எச். குலதுங்க, டி. தொடவத்த மற்றும் ஆர்.ஏ. ரணராஜா ஆகிய நீதிபதிகள் மற்றும் முன்னாள் சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் எம். சி.எல்.பி. கொபல்லாவ ஆகியோர் இவ்வாறு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரசியலமைப்பின் 107 ஆவது சரத்தின்படி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் 2024 செப்டெம்பர் 06 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நம்பிக்கை இழந்திருந்த நாட்டுக்கு ஒரே நம்பிக்கை ரணில் மட்டுமே

# தோட்டத் தொழிலாளரின் ரூ.1,700 சம்பளம், வீட்டுப் பிரச்சினைகளுக்கும் தீர்வு உறுதி

### அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

**மத்துகமவிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்**



நம்பிக்கை இழந்திருந்த நாட்டுக்கு நம்பிக்கை நட்சத்திரமாகத் தோன்றி நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாத்த ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே என அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நாட்டின் சிறந்த எதிர்காலத்துக்காக அவர் ஆரம்பித்துள்ள வேலைத் திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு எதிர்வரும் தேர்தலில் நாட்டு மக்கள் அவருக்கு முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.


மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு தற்போதுள்ள பெரும் பிரச்சினை சம்பள அதிகரிப்பு மற்றும் வீட்டுப் பிரச்சினையே ஆகும்.

நாம் ஏற்கனவே வழங்கியுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொடுத்துள்ளோம். அதுபோன்று இந்த பிரச்சனைகளுக்கும் நிச்சயம் தீர்வு பெற்றுக் கொடுப்போம் என அவர் தெரிவித்தார்.

06

## தினகரன் 92 வருடங்களுக்கு முன் தினகரன்

### இன்று 07 செப்டெம்பர் 1932


காலியில் தெங்குப் பொருள் ஏற்றுமதி
இருவாரங்களுக்கிடையில் 2,700 டன்
காலி, திங்கள்
சமீபகாலந்துவங்கி, ஐரோப்பாக் கண்டத்திலுள்ள துறைமுகங்களுக்கு காலியிலிருந்து ஏற்றுமதியாகும் கொப்ரா, தென்னந் தும்புக் கயிறு, தேங்காய் எண்ணெய் ஆகியவை அதிகப்பட்டு வருகிறது.

### காலியில் தெங்குப் பொருள் ஏற்றுமதி

### இரு வாரங்களுக்கிடையில் 2,700 டன்

சமீபகாலந்துவங்கி, ஐரோப்பாக் கண்டத்திலுள்ள துறைமுகங்களுக்கு காலியிலிருந்து ஏற்றுமதியாகும் கொப்பரா, தென்னந் துப்புக் கயிறு, தேங்காய் எண்ணெய் ஆகியவை அதிகப்பட்டு வருகிறது.

**(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)**

## ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர்

# ஏனைய வேட்பாளர்களுக்காக பிரசாரங்கள் செய்வதற்குத் தடை



ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் ஏனைய வேட்பாளர்களுக்காக பிரசாரம் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தேர்தல் ஆணையாளர் சமன் ரத்நாயக்க ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

இவ்வாறான செயற்பாடுகள் சட்டத்துக்கு விரோதமானது மட்டுமன்றி நெறிமுறையற்ற செயற்பாடுகளாகவே இருக்கும் என தெரிவித்துள்ளார்.

இந்த வேட்பாளர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை பொதுமக்கள் அறிந்திருக்கிறார்கள். எனவே பொது மக்கள் தாங்களாகவே முடிவு செய்ய வேண்டுமென்று அவர் கூறியுள்ளார்.

அரசாங்க ஊழியர்களின் சம்பள திருத்தம் தொடர்பான அரசின் அண்மைய அறிவிப்பு தொடர்பாக கவலை தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், அது தற்போது நடைபெற்று வரும் தபால்மூல வாக்களிப்பு நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என தெரிவித்துள்ளார்.

# தமிழரசு கட்சி சஜித்துக்கு ஆதரவு; இது தமிழ் மக்களின் முடிவு அல்ல

## அது கட்சி சார்ந்த முடிவென்கிறார் டக்ளஸ்



ஜனாதிபதி தேர்தலில் இலங்கை தமிழரசு கட்சி, சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு வழங்கப்போவதாக எடுத்த முடிவு மக்களின் முடிவல்ல எனவும் அது கட்சி சார்ந்த முடிவெனவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் பாராளுமன்றத்தில் மாகாண சபை தேர்தல் தொடர்பான தனி நபர் பிரேரணையை முன்வைத்திருந்தார். அது தொடர்பான விவாதங்கள் பாராளுமன்றத்தில் நடைபெற்று வருகிறது. தமிழ் கட்சிகள் ரணில் விக்கிரமசிங்கவை அண்மையில் சந்தித்தபோது இந்த பிரேரணையை நிறைவேற்றுவது தொடர்பாக சாதகமான கருத்துக்களை முன்வைத்ததாக அறிகிறேன்.

06

# எல்பிட்டிய பிரதேச சபை தேர்தல் SLPP கட்டுப்பணம் செலுத்தியது

எல்பிட்டிய பிரதேசசபை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவினருக்கான கட்டுப்பணம் நேற்றுக் காலை (06) காலை காலி தேர்தல் அலுவலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

நிகழ்வில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகல காரியவசம் மற்றும் குழுவினர் கலந்து கொண்டனர்.

எல்பிட்டிய பிரதேச சபை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் பெரமுன குழுவின் தலைவராக முன்னாள் தவிசாளர் நளின் பிரியதர்ஷன செயல்படுகின்றார். இவர் அடங்களாக நான்கு பேர் இந்தத் தேர்தலில் போட்டியிடவுள்ளனர்.

# 5,000 ரூபா போலி நாணயத்தாள்களுடன் பெண்ணொருவர் கைது



62 போலி 5,000 ரூபாய் நாணயத்தாள்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட குறித்தப்பெண் 44 வயதுடைய ஹெனேகம, அக்குரஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்தவரென பொலிஸார் தெரிவித்தனர்.

தெமட்டகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேலுவன வீதி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது சந்தேகநபர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெமட்டகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சட்டத்தின் ஆட்சியை பாதுகாத்து நாட்டை கட்டியெழுப்ப வேண்டும்

### மக்கள் சரியான தீர்மானம் எடுப்பது அவசியம் ஜனாதிபதி வேட்பாளர் விஜேயதாச ராஜபக்ஷ



எமது ஆரம்ப ஆட்சியாளர்கள் போராடி வெள்ளையர்களிடமிருந்து எமக்கு சுதந்திரத்தை பெற்றுத்தந்தபோதும் 1977க்கு பின்னர் நாட்டை ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் எமக்கு வங்குரோத்தடைந்த நாட்டையே வழங்கியுள்ளனர்.

அதனால் மோசடிமிக்க ஆட்சிமுறையை இல்லாதொழித்து, நாட்டை ஆரம்பத்திலிருந்து கட்டியெழுப்ப வேண்டியிருக்கிறது. அதற்கான சந்தர்ப்பம் தற்போது மக்களுக்கு கிடைத்திருக்கிறது. அதனால், இந்த தேர்தலில் மக்கள் சரியான தீர்மானத்தை எடுக்க வேண்டுமென ஜனாதிபதி வேட்பாளர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார். தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் விஜேயதாச ராஜபக்ஷவின் முறையானதொரு நாடு எனும் தொனிப்பொருளிலான தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிட்டு வைக்கும் நிகழ்வு (05) இலங்கை மன்றக்கல்லூரியில் நடைபெற்றது. இதன்போது, தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுவைத்து உரையாற்றும்போது இதனை தெரிவித்த அவர்,

எமது நாடு 450 வருட காலம் வெள்ளையர்களின் ஆட்சியின் கீழ் அடிமைகளாக இருந்தது. எமது ஆரம்ப தலைவர்களின் அர்ப்பணிப்பு தியாகத்தினால் 1948 இல் எமக்கு சுதந்திரம் கிடைத்தது.

06

## 13 ஆவது திருத்தத்தை முழுமையாக

# நடைமுறைப்படுத்துவதே சஜித் வழங்கிய உத்தரவாதம்

### சிறிதரனுக்கு மனோ கணேசன் பதில்



அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாகவே சஜித் பிரேமதாச வாக்குறுதியளித்திருக்கிறார் என சுட்டிக்காட்டிய தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், இப்போது 13 ஆவது திருத்தம் கிடைக்கப்பெறுவதை நேரடியாகவோ, மறைமுகமாகவோ தடுக்கும் பட்சத்தில், எதிர்வருங்காலங்களில் சமஷ்டியோ அல்லது அதற்கும் அப்பால் சென்ற மிகச்சிறந்த தீர்வோ கிடைத்தாலும் கூட அதன்கீழ் வடக்கு, கிழக்கில் வாழ்வதற்கு தமிழர்கள் எஞ்சியிருக்கமாட்டார்களென எச்சரிக்கை விடுத்துள்ளார்.

06

# சஜித்துக்கு தமிழரசு கட்சி ஆதரவு வழங்கவில்லை

### சுமந்திரன் அணி மட்டுமே ஆதரவு

***யாழ். விசேட நிருபர்***



சஜித் பிரேமதாசவுக்கு தமிழரசு கட்சி ஆதரவு வழங்கவில்லை.

அக்கட்சியிலுள்ள சுமந்திரன் அணியினர் மட்டுமே ஆதரவு வழங்கியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சி.வி விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். நகரில் தமிழ் பொது வேட்பாளருக்கான பரப்புரையில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

இதுவரை காலமும் நாங்கள் இலங்கையராகவே தேர்தல்களில் பங்கேற்று வந்தோம்.

06

# கடற்பரப்பில் கடும் காற்று நிலை மீனவர் சமூகத்துக்கு எச்சரிக்கை



### வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

காலியிலிருந்து மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை முதல் பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகம் மணிக்கு 65 கிலோமீற்றர் வரையிலும், மன்னாரிலிருந்து புத்தளம் மற்றும் கொழும்பிலிருந்து காலி வரையான கடற்பரப்புகளில் மணிக்கு 55 கிலோமீற்றர் வரையிலும் வீசக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதன்காரணமாக மீனவ மற்றும் கடற்சார்தொழிற்றுறை மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு திணைக்களம் அறிவித்துள்ளது. அத்துடன், மத்திய மலையகத்தின் மேற்கு சரிவுகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் மணிக்கு 45 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆவணி மாதம் 21ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் அவ்வல் பிறை 03

### குறள் தரும் சிந்தனை



ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்

தமக்குக் கேடு செய்தவரை மன்னித்திடாமல் தண்டிப்பவர்க்கு அந்த ஒரு நாள் மட்டுமே இன்பமாக அமையும். மறப்போம் மன்னிப்போம் எனப் பொறுமை கடைப் பிடிப்பபோருக்கோ, வாழ்நாள் முழுதும் புகழ்மிக்கதாக அமையும்.

# நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் தேர்தல்!

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் இரு வாரங்களே உள்ளன. தேர்தல் பிரசாரங்கள் சூடு பிடித்துள்ளன. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களும், அவர்களது அணியின் அரசியல் முக்கியஸ்தர்களும் தீவிரமான பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கையில் இம்முறை ஜனாதிபதித் தேர்தல் முன்னொருபோதும் இல்லாதவாறு மிகுந்த பரபரப்பு நிறைந்ததாகக் காணப்படுகின்றது. இத்தேர்தலில் எல்லாமாக 39 பேர் வேட்பாளர்களாக உள்ள போதிலும், முன்னிலை வேட்பாளர்களாக மூவர் மாத்திரமே உள்ளனர். அம்மூவரில் இருவர் தத்தமது கட்சியின் சார்பில் போட்டியிடுகின்றனர். ஆனால் முன்னிலை வேட்பாளர்களில் ஒருவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயேச்சை வேட்பாளராகவே போட்டியிடுகின்றார்.

முன்னிலை வேட்பாளர்கள் மூவருக்கும் இடையில் கடுமையான போட்டி நிலவுவதை தேர்தல் களம் எடுத்துக் காட்டுகின்றது. எனினும் தேர்தல் பிரசாரங்களில் ஒன்றுதிரண்டுள்ள மக்கள் கூட்டத்தினரை அடிப்படையாகக் கொண்டு ஒருபோதுமே வெற்றிவாய்ப்பை முன்கூட்டிக் கணித்துவிட முடியாது. இதற்கான உதாரணங்களாக கடந்தகால தேர்தல்கள் பலவற்றைக் குறிப்பிட முடியும்.

குறித்ததொரு வேட்பாளரின் பிரசாரக் கூட்டத்துக்கு வருகை தருகின்ற மக்கள் அனைவருமே அவ்வேட்பாளருக்கு தேர்தலில் வாக்களிப்பரென்பதை உறுதிப்படுத்திவிட முடியாது. அதேநேரம் அப்பிரசாரக் கூட்டத்துக்கு வருகை தராதவர்களும் அவ்வேட்பாளருக்கு தேர்தலில் வாக்களிப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது. குறித்த வேட்பாளருக்கு வெளிப்படையாக ஆதரவு அளித்து அட்டகாசம் புரிகின்ற ஜனரஞ்சமான சுபாவத்தை விரும்பாதவர்களும் உள்ளனர்.

ஆகவே தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் மக்கள் கூட்டத்தைப் பார்த்து தேர்தல் வெற்றியைக் கணித்துவிட முடியாது.

இதுதவிர, உறங்குநிலை வாக்குகளையும் இவ்விடத்தில் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. வாக்காளர்களில் ஏராளமானோர் தங்களை எவ்வேட்பாளருக்குச் சார்பானவரென்பதை இனங்காட்டிக் கொள்வதில்லை. அவர்களது வாக்குகள் உறங்குநிலை வாக்குகளாகக் கொள்ளப்படுகின்றன.

உண்மையில் அவர்கள்தான் சிந்தித்து முடிவெடுப்பவர்கள் ஆவர். தங்களது ஆதரவை வெளிக்காட்டிக் கொள்ளாமல், அமைதியாக இருந்து சிந்தித்து வாக்களிப்பவர்கள் இவர்களாவர். நாட்டின் தலைமைத்துவத்துக்குப் பொருத்தமான அனுபவமும், ஆற்றலும், ஆளுமையும் நிறைந்த வேட்பாளர் யார்? பிரசாரக் கூட்டங்களில் உரத்துக் கோஷமெழுப்பி, தனது இயலாமையை மூடிமறைக்கின்ற பலவீனமான வேட்பாளர் யார்?

இவ்வாறான வினாக்களை அலசி ஆராய்ந்து தீர்க்கமான முடிவுடன் வாக்களிப்போர் நாட்டில் ஏராளமானோர் உள்ளனர். இவ்விதமான வாக்காளர்களில் அனைவரையுமே கற்றறிந்தவர்களென்று கூறிவிட முடியாது. சிந்தனையாற்றல் என்பது கற்றலினால் மாத்திரம் வருவதல்ல. பயனுள்ள வாசிப்பு, ஆழமான சிந்தனை, நம்பத்தகுந்த ஊடகங்களைப் பின்பற்றுதல் போன்ற பலவிதமான செயற்பாடுகளால் அறிவு பெற்றோர் ஏராளமானோர் உள்ளனர்.

இவ்வாறான அமைதியான வாக்காளர்களின் தீர்மானத்திலேயே தேர்தலின் வெற்றி தீர்மானிக்கப்பட முடியும். பிரசாரக் கூட்டங்களுக்குத் திரளுகின்ற மக்கள் கூட்டத்தினரை வைத்து தேர்தலின் வெற்றியைக் கணிக்க முடியாது என்பதை எமது நாட்டின் கடந்தகால தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டியுள்ளன என்பது உண்மை.

இலங்கையின் அரசியல் எப்போதுமே விசித்திரமானது. கடந்த காலங்களில் இனவாதத்தைத் தூண்டுகின்ற அரசியல் கலாசாரம் பின்பற்றப்பட்டது. அரசியல் முக்கியஸ்தர்கள் பலர் மற்றைய இனங்கள் மீதான வெறுப்பை தமது மக்கள் மத்தியில் விதைத்து வாக்குகளை அறுவடை செய்தனர். இனவாதம் என்பது அரசியலில் பெரும் துரும்பாகப் பயன்படுத்தப்பட்டது. ஆட்சியில் இருந்தவர்களே இனவாதத் துரும்பைப் பயன்படுத்தி வாக்காளர்களைக் கவர்ந்திழுத்தமை தெரிந்த விடயம்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் சிறந்ததொரு ஜனநாயகவாதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கணிக்கப்படுகின்றார். அதேவேளை இனவாதம் போன்ற துரும்புகளைப் பயன்படுத்தி குறுக்குவழியில் அரசியல் செய்கின்ற சுபாவம் இல்லாத தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராட்டப்படுகின்றார். தனது கடந்தகால அரசியல் செயற்பாடுகளை ஒளிவுமறைவின்றி, தெளிவான ஆதாரங்களுடன் மக்களுக்கு வெளிப்படுத்துகின்ற அரசியல் தலைவராகவும் அவர் வர்ணிக்கப்படுகின்றார்.

அதேசமயம் தனது எதிர்காலத் திட்டங்களை மக்களிடம் தெளிவாக வெளிப்படுத்துகின்ற தன்மையையும் அவர் கொண்டுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னைய அரசாங்கங்களில் அமைச்சராகவும், பிரதமராகவும் பதவி வகித்த காலங்களிலேயே நாட்டில் சிறப்பான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன என்பதை அனைவரும் அறிவர். நாட்டின் கல்விக்கொள்கையில் அவர் அறிமுகப்படுத்திய சிறப்பான திட்டங்கள் ஏராளம்.

ஜனரஞ்சமான கோஷங்களால் ஈர்க்கப்பட்டு எந்தவொரு வேட்பாளருக்கும் வாக்களிக்கும் மனோநிலையில் மக்கள் இன்று இல்லை. ஒவ்வொரு வேட்பாளரின் ஆற்றல், ஆளுமையை வைத்தே மக்கள் தங்களது எதிர்காலத் தலைவரைத் தீர்மானிக்கின்றனர்.

editor.tkn@lakehouse.lk

# இலங்கைத் தமிழருக்கு வழங்கப்பட வேண்டிய அரசியல் உரிமைகள்

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் 39 வேட்பாளர்கள் களத்தில் குதித்துள்ளனர். தென்னிலங்கையில் அவர்களின் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. தமிழ் பேசும் மக்கள் பிரதேசங்களில் அதிகாரப்பரவலாக்கம் பற்றிய வாதங்கள் வலுவடையத் தொடங்கியுள்ளன. மலையகக் களத்தில் காணியுரிமை, குடியிருப்புரிமை போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. முஸ்லிம் மக்களின் அரசியற் கட்சிகள் அவர்களின் தனித்துவ சமூகத் தேவைகள், அனுபவிக்கும் இடர்கள், அவற்றுக்கான நிவாரணங்கள் ஆகிய கோரிக்கைகளை வலுவாக முன்வைக்கின்றன.

1956 ஆம் ஆண்டு பண்டா_ செல்வா ஒப்பந்தமும் , 1965 ஆம் ஆண்டு டட்லி செல்வா ஒப்பந்தமும் கைச்சாத்தாகின. ஆயினும் முன்னையது கிளர்ச்சிகளினால் கிழித்தெறியப்பட்டது. இரண்டாவது ஒப்பந்தத்தினடிப்படையில், நியாயமான தமிழ் மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும், அர்த்தபூர்வமான அதிகாரப்பகிர்வு எதுவும் இடம்பெறவில்லை.

தமிழரசுக்கட்சியின் அமைச்சராகவிருந்த மு.திருச்செல்வம் பதவியை இராஜினாமா செய்தார். டட்லி_ செல்வா ஒப்பந்தமும் வலுவிழந்தது. இன்றுவரை தமிழர்கள் அரசின் நிர்வாக விடயங்களில் தமிழ்மொழி உரிமையினைப் பூரணமாக அனுபவிக்கவில்லை என்பதே யதார்த்தம்.

இலங்கையின் அரசியற் சட்ட வரலாற்றில் 1970 ஆம் ஆண்டுத் தேர்தலுடன் புதிய அரசியல் சட்டத்தை வரையும் சந்தர்ப்பம் கிடைத்தது.தமிழர்கள் சார்பில் அரசியல் சட்ட நீதி, சமஷ்டி ஆட்சிமுறை ஆகிய கோரிக்கைகள் அரசமைப்பு நிர்ணயசபையில் முன்மொழியப்பட்டன. இந்தக் கோரிக்கைகள் பெரும்பான்மை இனப்பிரதிநிதிகளால் தோற்கடிக்கப்பட்டன. இதனால் இந்தச் சபையிலிருந்து தமிழரசுக்கட்சி வெளிநடப்புச் செய்தது.



1972 ஆம் ஆண்டு பிரகடனம் செய்யப்பட்ட இலங்கையின் முதலாவது அரசியற் சட்டம் தமிழர்களின் பங்குபற்றுதலின்றியும், அவர்களது உரிமைகளை உள்ளடக்காமலுமே பிரகடனம் செய்யப்பட்டது. இந்நிகழ்வினை அடுத்து வட்டுக்கோட்டைப் பிரகடனம் உருவானது.

இவற்றைத் தொடர்ந்து ஆயுதப்போராட்டமாகப் பரிணமித்த தமிழ் அரசியற் செயற்பாடுகள், ஏற்ற இறக்கங்களைச் சந்தித்தாலும், அவர்தம் அரசியற் சட்ட நீதிக்கான கோரிக்கைகளும் செயற்பாடுகளும் என்றும் எச்சக்தியாலும் மழுங்கடிக்கப்பட முடியாதவையாகும்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் இறக்கப்படவேண்டும் என்பதற்கு தெளிவான காரணங்கள் கூறப்பட்டிருந்தாலும், மாற்றுக்கருத்துகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசிய இனத்திற்கு உரித்தான சர்வதேச உரிமைகளை அமுலாக்கும் பொறுப்பு இலங்கை அரசிற்கு உண்டு. அரசுகளுக்குரிய சட்டக்கடமைப்பாடுகளின் அடிப்படையிலும், சர்வதேச சட்டவாட்சித் தத்துவத்தின் அடிப்படையிலான அரசின் கடமை, பொறுப்பு ஆகியவற்றின் அடிப்படையிலும் இவற்றை அமுலாக்கும் பொறுப்பு அரசிற்குரியது.

இலங்கையின் ஒற்றையாட்சிக் குடியரசு, இறைமை , அரசியல் சட்டத் திருத்தம் என்பன பற்றிய சட்ட ஏற்பாடுகள் மிகுந்த சட்ட வலுவுடன் காணப்படுகின்றன. ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளின்போது பேசப்படுகின்ற அதிகாரப்பகிர்வு, மொழி உரிமை போன்ற விடயங்கள் தேர்தல் பிரசாரத்துடனோடு மட்டும் முடிவடைந்து விடுகின்றவையாக மட்டுமே இருக்கமுடியும்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களது இன்றைய நிலைக்குக் குடியேற்ற நாடுகள் எமக்கிழைத்த தவறுகள் முக்கியமானவை. பிரித்தானிய ஆட்சி முடிவாக்கத்தின்போது தமிழர்களின் ஆட்புல அந்தஸ்தும் இறைமை அதிகாரங்களும் உரிய முறையில் தீர்மானிக்கப்படாமல், தமிழர்கள் நட்டாற்றில் விடப்பட்டனர்.

'இலங்கையில் இருமொழி பேசும் அரசியல் வலயங்கள் இருப்பதனால், இத்தீவில் ஒற்றையாட்சி பொருத்தமற்றது' என்று பிரித்தானியப் பொதுமக்கள் சபையில் விடுக்கப்பட்ட எச்சரிக்கைகள் இலங்கையில் உதாசீனம் செய்யப்பட்டன. தமிழர்கள் உள்ளூர்க் குடியேற்றவாத ஆட்சியின் கீழ் வாழத் தொடர்ந்து நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இவை உணரப்படுமானால், தமிழ்த் தலைமைகள் சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களின் சட்ட வலுவற்ற கருத்துகளையும் உத்தரவாதங்களையும் உதாசீனம் செய்து, இலங்கையின் உள்ளூர் மோதல்களுக்கான சரியான அணுகுமுறைகளை அடையாளங் கண்டு ஆக்கபூர்வமாக ஒன்றிணைந்து செயற்படுவார்கள்.

கலாநிதி சந்திரசேகரம் பரமலிங்கம்...
சட்டத்தரணி

# பாவலர்மணி திருமதி சரளா விமல்ராசாவின் நான்கு மரபுக்கவிதை நூல்கள் வெளியீடு

சித்தானைக்குட்டி சுவாமிகளின் ஆசிர்வாதத்தினை பெற்ற அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பனங்காட்டு மண்ணில் பிறந்து 30 வருடகாலமாக சுவிற்சலாந்து நாட்டில் வாழ்ந்துவரும் சமூக சேவையாளரும், தமிழ் கலை இலக்கியவாதியுமான பாவலர்மணி திருமதி சரளா விமல்ராசாவின் நான்கு மரபுக்கவிதை நூல்கள் அவரது ஊரான அக்கரைப்பற்று 'சுவாமி விபுலாந்தா சிறுவர் இல்லம்' மண்டபத்தில் மிகவும் பிரமாண்ட முறையில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

அக்கரைப்பற்று இந்து இளைஞர் மன்றம் மற்றும் பிரான்ஸ் கம்பன் கழகம் இணைந்து இறைபணிச்செம்மல் த.கயிலாயபிள்ளை தலைமையில் இடம்பெற்ற நூல் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்களின் பிரதிநிதியாக கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி நீர்வழங்கல் போக்குவரத்து கிராம அபிவிருத்தி உள்ளிட்ட அமைச்சுக்களின் செயலாளர் கலாநிதி எம். கோபாலரெத்தினம் கலந்து கொண்டார்.

விசேட அதிதிகளாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.அதிசயராஜ், தென்கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் பீடாதிபதி எஸ்.குணபாலன், தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அனுசியா சேனாதிராஜா, உலகத்தமிழ் கலை இலக்கிய மற்றும் பண்பாட்டு பேரவையின் இலங்கைக்கான தலைவர் சு.சிவபாலன் மற்றும் கல்வி அதிகாரிகள், கவிஞர்கள், சமூக ஆர்வலர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

பாவலர்மணி திருமதி. சரளா விமல்ராஜ் பல நூல்களை இதுவரையில் வெளியிட்டிருந்தாலும் இவ்வாறு நான்கு மரபுக்கவிதை நூல்களையும் தொகுத்தாக்கி தனது தாயார் அமராவதியின் 80ஆவது பிறந்த தினத்தில் இலங்கையில் ஒரே நாளில் வெளியிட்டுள்ளார்.







இவ்வாறு அவரால் தமிழர் பண்பாட்டிலக்கியம் கமழும் 'விருத்தமாயிரம்' தன் மண்ணைப் புகழ்பாடும் 'பனங்காட்டு அந்தாதி' குருவிற்கு மரியாதை செய்யும் 'பாட்டரசர் புகழ் கலி விருத்தம்' சிந்தை மகிழும்'சிந்து பாடுவோம்' ஆகிய நான்கு பெறுமதிமிக்க நூல்கள் பிரதம அதிதியால் வெளியீடு செய்து வைக்கப்பட்டன.

முதல் பிரதி கலாநிதி கோபாலரெத்தினம் அவர்களுக்கு வழங்கப்பட்டதுடன் ஏனைய அதிதிகளுக்கும் வழங்கப்பட்டன. இதேநேரம் நூலாசிரியர் உலகத்தமிழ் கலை இலக்கிய மற்றும் பண்பாட்டு பேரவையின் இலங்கை கிளையினரால் கௌரவிக்கப்பட்டதுடன், அக்கரைப்பற்று இந்து இளைஞர் மன்றத்தினரால் பாசுகவி எனும் பட்டம் வழங்கி பெருமைப்படுத்தப்பட்டார்.

நூல் அறிமுக உரையினை கவிஞர் க.யோகானந்தம் வழங்க ஆய்வுரைகளையும் வாழ்த்துரைகளையும் சாமஸ்ரீ ஏ.எல்.கிதுர்முகமட் மற்றும் பொன் லோகநாதன், கவிஞர் தம்பிலுவில் ஜெகா, பாவேந்தல் பாலமுனை பாறுக், ஓய்வுநிலை அதிபர் மு.கருணாநிதி, ஓய்வு நிலை விரிவுரையாளர் நா.செல்வநாதன், ஓய்வுநிலை ஆசிரியர் சா.புண்ணியமூர்த்தி ஆகியோர் வழங்கினர். நன்றியுரையை இந்து இளைஞர் மன்ற உபதலைவர் க.கிருஸ்ணமூர்த்தி வழங்கினார்.

நிகழ்வில் நூலாசிரியரின் தாயார் கௌரவிக்கப்பட்டதுடன் அவரது நண்பர்கள் குழாமினராலும் கௌரவிக்கப்பட்டார்.

நிகழ்வில் ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்களின் வாழ்த்துச் செய்தியினை செயலாளர் கலாநிதி கோபாலரெத்தினம் வாசித்தார்.

வாச்சிக்குடா விஷேட நிருபர்...

# சுற்றாடலைப் பேணுவதற்கு தரமான குடியிருப்புகள் அவசியம்



உலகின் ஆரம்ப காலத்தில் உருவான குடியிருப்புக்கள் நதிக் கரைகளில்தான் தோற்றுவிக்கப்பட்டன. அங்கேதான் உலக நாகரிகங்களும் தோற்றுவிக்கப்பட்டன என்று வரலாறு கூறுகின்றது. குடியிருப்பானது மனித வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாவசியமானது. குடியிருப்பு என்பது வீடு, சுகாதார வசதி, குடிநீர் வசதி, நல்ல சுற்றாடல், வீதிப் போக்குவரத்து, தொலைத்தொடர்பு, சமூக கட்டமைப்பு ஆகிய அனைத்தையும் கொண்டதே ஆகும். இதற்கு அமைவாகவே குடியிருப்புக்களும் நகரங்களும் அமைய வேண்டுமென்பது ஐக்கிய நாடுகள் சபையின் இலட்சியமாகும்.

இந்த இலட்சியத்தைக் கொண்டு மனித குடியிருப்பு குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் முதல் மாநாடு கனடாவின் வான்கூவரில் 1976 இல் நடைபெற்றது. ஐ.நா பொதுச்சபையின் சிபாரிசின் பெயரில் 1985 இல் ஒவ்வொரு வருடமும் உலக குடியிருப்பு தினம் அனுஷ்டிக்கப்பட வேண்டுமென்று முடிவுசெய்யப்பட்டது. அதற்கமைய முதலாவது உலக குடியிருப்பு தினம் 1986 தொடக்கம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

சர்வதேச குடியிருப்பு தினம் இந்த வருடம் செப்டெம்பர் மாதம் 07 ஆம் திகதி "சிறந்த நகர்ப்புற எதிர்காலத்தை உருவாக்க இளைஞர்களை ஈடுபடுத்துதல்" எனும் தொனிப்பொருளுக்கமைய அனுஷ்டிக்கப்படவிருக்கிறது.



உலகில் வாழும் அனைவரும் குடியிருப்பு வசதிகளை கொண்டிருக்க வேண்டும் என்பதே ஐக்கிய நாடுகள் சபையின் இலட்சியம். ஆனால் இன்று உலகில் வாழும் மக்களின் தொகை 817 கோடியையும் தாண்டி விட்டது. 200 கோடி மக்கள் வீடற்றோர்களாக இருக்கின்றனர். இவர்கள் சுத்தமான குடிநீர் வசதி, மின்சார வசதி, சுகாதார வசதி ஆகியன இன்றி வாழ்கின்றனர். நகரங்களிலும் 40 சதவீதத்தினர் சுத்தமான நீர், பொதுவசதிகள் என்பன கிடைப்பதில்லை. இன்று உலக சனத்தொகையில் 55 சதவீதத்தினர் நகரங்களிலேயே வாழ்கின்றனர். 2025 இல் 2/3 பங்கினர் நகரங்களில் தான் வாழ்வார்கள் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

தற்போது உலகில் நகர்ப்புறங்களில் சனத்தொகையில் அரைவாசிப் பேர் திட்டமிடப்படாத ஆக்கிரமிக்கப்பட்ட குடியேற்றங்களில் தங்கி வாழ்கின்றனர். எனவே தொற்று நோய்களை கொண்ட சுற்றாடலில் அமைந்த தரக்குறைவான வீடமைப்பு திட்டங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலக சனத்தொகையானது கி.பி. 01 இல் 2 கோடியாக காணப்பட்டது. இன்று 817 கோடி ஆகும். சனத்தொகை அதிகரிக்க அதிகரிக்க குடியிருப்பு வசதிகளில் தரக்குறைவு ஏற்படும். இதனால் தொற்று நோய்கள், புதிய நோய்கள் அதிகரிக்க வாய்ப்புகள் உண்டு. சனத்தொகையானது அதிகரிக்கும் போது குடியிருப்பு தரக்குறைவாக இருக்கும் நிலையில் பெண்களின் சீரழிவு, சிறுவர் துஷ்பிரயோகம், வறுமை, வேலையின்மை காணப்படும். இவற்றை தவிர்க்கும் முகமாக உலகில் வாழும் அனைவருக்கும் தரமான குடியிருப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் ஐக்கிய நாடுகள் சபையின் இலட்சியமாகும்.

மூன்றாம் உலக நாடுகளின் சனத்தொகையானது விரைவாக அதிகரித்துச் செல்லும் அளவுக்கு குடியிருப்பு வசதிகள் பெருகவில்லை. சுகாதார வசதிகளும் குடிநீர் வசதிகளும் போதியதாக இல்லை. உலகெங்கும் நகரமயமாக்கல் மிகவும் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே இந்த விடயத்தில் மிகவும் அவதானமாக நன்கு திட்டமிட்டு செயலாற்ற வேண்டும் என்பதிலும் ஐக்கிய நாடுகள் சபையினர் அக்கறை கொண்டுள்ளனர்.

நகரங்களை மக்கள் அதிகளவில் நாடுவதனால், நகரங்களில் மக்கள் வாழ்வதற்கு பற்றாக்குறை ஏற்படும் போது புதிய நகரங்களை உருவாக்குகிறார்கள். இதனால் சுற்றாடல் பாதிக்கப்படுகின்றது.

திட்டமிடப்படாத குடியிருப்புக்கள் காரணமாக உலகின் வனம் முற்றாக அழிந்துவிடும் ஆபத்துள்ளது. உலகின் வெப்பவலயக் காடுகள் ஒரு மணித்தியாலத்திற்கு சராசரியாக 60,000 ஏக்கர் என்ற வீதத்தில் அழிந்த வண்ணம் இருக்கின்றன. இலங்கைக் காடுகளில் இன்று எஞ்சியுள்ளது 25 சதவீதம் மட்டுமே. மனித அபிவிருத்திக்காகவும் அடுத்த சந்ததிக்காகவும் இயற்கை வளங்களை திட்டமிட்டு பேண வேண்டிய அவசியத்தை ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து செயற்பட வேண்டும்.



கலாபூஷணம்
பரீட் இக்பால்...

# பசிபிக் தீவுகள் பேரவை மாநாடு: அவுஸ்திரேலியாவின் பாதுகாப்பு ஒப்பந்தம்!





பதினெட்டு நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்ட '53 ஆவது பசிபிக் தீவுகள் பேரவை' (53 rd Pacific Islands Forum) தலைவர்கள் கூட்டம் டோங்கா நாட்டில் உள்ள நுகுஅலோவாவில் (Nuku'alofa, Tonga) ஒகஸ்ட் 26 இல் தொடங்கியது.

இக்கூட்டத்திற்கு டோங்காவில் உள்ள உயர்மட்ட பிரதிநிதிகளுடன் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் கலந்து கொண்டார். இக் கூட்ட கலந்துரையாடலுக்கான நிகழ்ச்சி நிரல் காலநிலை, பாதுகாப்பு மற்றும் பிராந்தியத்தின் பொருளாதார நிலைமை ஆகியவற்றை உள்ளடக்கியது.

பசிபிக் தீவுத் தலைவர்களுக்கும் ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோகுட்டெரஸுக்கும்இடையிலான சந்திப்பே மிக முக்கியமானதாகும்.

பசிபிக் தீவு நாடுகளின் நிலையான வளர்ச்சிக்கான இந்த மாநாட்டில் அவுஸ்திரேலியாவில் வளர்ந்து வரும் உறவுகளை அடிப்படையாக வைத்து பல பொருளாதார உதவிகள் எட்டப்படும் எனக் கருதப்படுகிறது.

இந்த மாநாட்டில் சிறிய தீவுகள், மற்றும் வளரும் மாநிலங்கள் எதிர்கொள்ளும் சுற்றுச்சூழல் சவால்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் மீது கவனம் செலுத்தப்படுகிறது. காலநிலை மாற்றத்தைப் புரிந்து கொள்ளுதல், ஒத்துழைப்பு மற்றும் கூட்டு நடவடிக்கை ஆகியவற்றை வளர்க்கும் ஒரு சூழலை ஊக்குவிக்க இந்த மாநாடு வழிவகுக்கும்.

அத்துடன் பூமியின் தட்பவெப்பநிலை மாற்றத்தை தணிக்கவும், பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் நிபுணத்துவ பரிமாற்றத்தை ஊக்குவிக்கவும், காலநிலை பின்னடைவை கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேம்படுத்தவும் இந்த மாநாடு உதவும் எனக் கருதப்படுகிறது.

**பசிபிக்கில் சீன ஆதிக்கம்:**

பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் வளர்ந்து வரும் இருப்பை எதிர்கொள்ள வடிவமைக்கப்பட்ட 400 மில்லியன் டொலர் அளவிலான பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு பசிபிக் தலைவர்களின் ஆதரவைப் பெற்று, அவுஸ்திரேலியப் பிரதமர் அந்தோனி அல்பானீஸ் குறிப்பிடத்தக்க இராஜதந்திர வெற்றியைப் பெற்றுள்ளார்.

ஆயினும் சில பசிபிக் நாட்டுத் தலைவர்களின் அழுத்தம் இருந்தபோதிலும், அவர்கள் இந்த ஒப்பந்தம் 'மறைவானது' என்றும், அமெரிக்கா தலைமையிலான சீனா மற்றும் மேற்கத்தேய நாடுகளுக்கு இடையிலான வல்லரசுப் போட்டியில் பசிபிக் சிக்க வைக்கப்படும் அபாயம் இருப்பதாகவும் கூறினர்.

டோங்கா நாட்டில் பசிபிக் தீவுகள் மாநாட்டில் அல்பானீஸ் மற்றும் மூன்று சக தலைவர்கள் இந்த ஒப்பந்தம் மன்றத் தலைவர்களால் அங்கீகரிக்கப்பட்டதாக அறிவித்தனர்.

இந்தப் பாதுகாப்பு முயற்சி 'பசிபிக் தலைமையில்' இருக்கும் என்று வலியுறுத்தும் அதேவேளையில், இந்த முயற்சிக்கு அவுஸ்திரேலியா முக்கிய நிதியளிப்பதாக இருக்கும். ஒப்பந்தத்திற்காக ஐந்து ஆண்டுகளில் $400 மில்லியன் செலவழித்து, பிரிஸ்பேனில் உள்ள அவுஸ்திரேலிய மத்திய பொலிஸ் வசதிகளில் ஒரு புதிய ஒருங்கிணைப்பு மையத்தை அமைக்கும்.

இந்த முயற்சியின்படி பப்புவா நியூ கினியாவில் தொடங்கி பசிபிக் முழுவதும் நான்கு பிராந்திய பயிற்சி மையங்கள் நிறுவப்படும். மேலும் இயற்கைப் பேரழிவுகள் அல்லது பிற நெருக்கடிகளுக்கு பதிலளிக்கும் வகையில் ஒரு புதிய பன்னாட்டு நிலைப் பொலிஸ் பிரிவு உருவாக்கப்படும் என அறியப்படுகிறது.

**பசிபிக் இராஜதந்திரம்:**

தொலைநோக்குப் பார்வையில் பசிபிக் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் சீனாவை ஓரங்கட்ட அவுஸ்திரேலியா முனைகிறது. பசிபிக் பகுதியில் தனது செல்வாக்கை விரிவுபடுத்த பெய்ஜிங்கின் ஆற்றல்மிக்க முயற்சிகளை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில், கடந்த வாரம் புதன்கிழமையன்று தலைவர்களின் கூட்டம் சீனாவால் நிதியளிக்கப்பட்ட ஒரு உயர்நிலைப் பாடசாலை விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

அது டோங்காவுக்கான சீனத் தூதுவர் மற்றும் டோங்காவின் பட்டத்து இளவரசரால் கடந்த வாரம் திறக்கப்பட்டது. தற்போது புதிய பாதுகாப்பு ஒப்பந்தத்தின் முன்னேற்றம் பெய்ஜிங்கைத் புறந்தள்ளி கீழ் வரிசைப்படுத்தியுள்ளது.

இந்த ஒப்பந்தம் சர்வதேச உறவுகளில் பொதுவான கொள்கைகளை மீறுவது மட்டுமல்லாமல், பசிபிக் நாடுகளின் பங்காளிகளை சுயாதீனமாகத் தேர்ந்தெடுக்கும் இறையாண்மையை மீறுகிறது என சீனா விமர்சித்துள்ளது.

பசிபிக் தலைவர்கள் அவுஸ்திரேலியாவை பிராந்தியத்தின் முதன்மைப் பாதுகாப்புப் பங்காளியாக மாற்றும் முயற்சியை சீனா ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. சீனாவின் காவல்துறை முன்பு பிஜி மற்றும் கிரிபாட்டி போன்ற பசிபிக் நாடுகளுக்குள் நுழைந்து பணியாற்றியது. தற்போதும் பப்புவா நியூ கினியா போன்ற நாடுகளுடன் காவல் ஒப்பந்தங்களை தக்க வைக்க முயல்கிறது.

இந்த பாதுகாப்பு முயற்சியானது பிராந்திய அமைதி மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்தவும், தேவைப்படும் நேரங்களில் ஒருவருக்கொருவர் ஆதரவளிக்கவும் இணைந்து செயல்படும் என ஆஸி பிரதமர் அல்பானீஸ் தெரிவித்துள்ளார்.

இந்த நேரத்தில், அவுஸ்திரேலியா தங்கள் பாதுகாப்பு பங்காளியாக உள்ளமை, குறிப்பாக புவிசார் மூலோபாய நலன்கள் மற்றும் புவிசார் மூலோபாய பாதுகாப்புக்கு ஏற்றதாக உருவாக்கப்பட்டுள்ளது என்று பசுபிக் தலைவர்கள் கூறினர்.

பிராந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு போன்ற சிக்கலான மற்றும் உணர்திறன் வாய்ந்த ஒன்றை ஒப்புக் கொள்வதற்கு பல வேறுபட்ட நாடுகள் ஒன்றிணைவது எளிதான விஷயம் அல்ல என்றும் கூறினர்.

**புதிய அமெரிக்க தூதரகம் :**

அவுஸ்திரேலியா இதை பிராந்தியத்திற்கான வெற்றியாகவும், பசிபிக் தீவு நாடுகளுக்கான முக்கிய பாதுகாப்பு பங்காளியாக அவுஸ்திரேலியாவின் பங்கை அங்கீகரிப்பதாகவும் அமையும்.

இதேவேளை அமெரிக்காவின் மிக முக்கியமான வெளிநாட்டு காவல் துறை அதிகாரிகளில் ஒருவரான, வெளியுறவுத்துறை துணைச் செயலர் கர்ட் கேம்ப்பெல், இந்த மாநாட்டிற்காக டோங்காவில் தங்கி இருக்கிறார். பிராந்தியத்தில் அமெரிக்காவின் புதுப்பிக்கப்பட்ட கவனத்தை இவரின் வருகை பிரதிபலிக்கிறது.

அத்துடன் அவர் தனது பயணத்தின் போது, காம்ப்பெல் வனுவாட்டுவில் ஒரு புதிய அமெரிக்க தூதரகத்தையும் திறப்பார் எனக் கூறப்பட்டுள்ளது.



**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# மலையாள சினிமாவை உலுக்கும் நீதிபதி ஹேமா கமிட்டி அறிக்கை!

## படவாய்ப்புகளுக்காக நடிகைகள் பலவந்தப்படும் சம்பவங்கள்!




அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள், பதவி விலகல்கள், பொலிஸ்துறை புகார்கள், பரபரப்புகள், தொடர் விவாதங்கள் என ஒரேயொரு அறிக்கை மலையாள சினிமாத் துறையை புரட்டிப் போட்டுக் கொண்டிருக்கிறது.

நீதிபதி ஹேமா கமிட்டி அறிக்கை சில நாட்களுக்கு முன் வெளியானது. மலையாள திரைத்துறையில் பாலியல் சுரண்டல்கள் நிகழ்வதாக அந்த அறிக்கை கூறுகிறது.

எனவே திரைத்துறை மட்டுமல்ல, பணியிடங்களில் பெண்கள் எதிர்நோக்கும் பாலியல் தொல்லைகள் குறித்த வலுவான விவாதங்கள் எழுந்துள்ளன.

2017ஆம் ஆண்டு பிரபல நடிகை ஒருவர் காரில் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டதாகக் குற்றச்சாட்டு எழுந்ததைத் தொடர்ந்து, திரையுலகில் பணிச்சூழல்கள் குறித்து ஆய்வு செய்யக் கோரி முதலமைச்சர் பினராயி விஜயனிடம் மலையாள சினிமாவில் பணிபுரியும் பெண்களுக்கான அமைப்பான 'Women in cinema collective (WCC)' அமைப்பினர் மனு அளித்தனர்.

இதைத் தொடர்ந்து, அதே ஆண்டில் நீதிபதி ஹேமா தலைமையிலான கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக் கமிட்டியில் மூத்த நடிகை டி.சாரதா, ஓய்வுபெற்ற கேரள முதன்மைச் செயலாளர் கே.பி. வல்சலாகுமாரி ஆகியோர் இடம்பெற்றனர்.

இந்த கமிட்டி கேரள திரைத்துறையில் பணிச்சூழல் எப்படி உள்ளது என்பதை அறிய பல்வேறு நபர்களிடம் பேசியது.

நடிகர்கள் மட்டுமல்ல, ஒளிப்பதிவாளர்கள், ஒப்பனைக் கலைஞர்கள், ஆடை வடிமைப்பாளர்கள் என இந்த கமிட்டி திரைத்துறையின் பல்வேறு பிரிவுகளில் பணிபுரியும் நபர்களிடம் உரையாடியது. வீடியோ, ஓடியோ, வட்ஸ்அப் தகவல்கள் என பல்வேறு வடிவங்களில் ஆதாரங்களை கமிட்டி சேகரித்தது.

இந்த கமிட்டி தனது அறிக்கையை 2019ஆம் ஆண்டு சமர்ப்பித்தது. ஆனால் கடந்த வாரம்தான் இது பொதுவெளிக்கு வந்துள்ளது.

இந்த அறிக்கை 290 பக்கங்களைக் கொண்டது. இருப்பினும், தங்களை பாலியல் ரீதியாகத் துன்புறுத்திய அல்லது சுரண்டலில் ஈடுபட்ட ஆண்களின் பெயர்களை பாதிக்கப்பட்ட பெண்கள் கூறியுள்ளதால், அதுதொடர்பான 63 பக்கங்கள், வெளியிடப்பட்ட அறிக்கையில் இடம்பெறவில்லை.

ஆனால் இந்தப் பக்கங்களை நீக்க சொன்னது யார் என்பது குறித்த தெளிவான தகவல் ஏதும் வெளியில் வரவில்லை.

மலையாள திரைத்துறையில் 'Adjustments' அல்லது 'Compromise' போன்ற வார்த்தைகள் பெண்கள் மத்தியில் பிரபலமாக இருப்பதாகவும், இதன்பொருள் அவர்கள் எப்போது வேண்டுமாலும் பாலியல் உறவுக்கு தயாராக இருக்க வேண்டும் என்பது தான் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது

மலையாள திரையுலகில் வலுவான கூட்டம் ஒன்று 'மாஃபியா' போலச் செயல்பட்டு வருவதாகவும், முக்கியமான இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், நடிகர்கள் உள்ளிட்டோர் மீது அக்குழு தடை விதிக்கும் என்றும் அந்த ஆணையத்திடம் முக்கிய நடிகர்ஒருவர் தெரிவித்ததாகக் குறிப்பிட்டுள்ளது.

## நடிகைகள் மீதான பாலியல் சுரண்டல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பரவலாக குரல்கள்!

திரைத்துறை, ஆண் நடிகர்கள், தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், மற்றம் இயக்குநர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. இவர்கள் அதீத புகழையும் பணத்தையும் பெற்றவர்கள். குற்றத்தில் ஈடுபட்டுவர்களில் அவர்களும் உள்ளனர் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

திரைத்துறையில் உள்ள ஆண்கள் எந்தத் தயக்கமும் இன்றி பாலியல் உறவுக்கு அழைப்பர். இவ்வாறு அழைப்பதை அவர்கள் ஏதோ தங்கள் பிறப்பு உரிமை போல உணர்கிறார்கள். இம்மாதிரியான சமயங்களில் பெண்கள் மறுப்பதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு. அவ்வாறு மறுத்தால் அவர்களுக்கு வாய்ப்புகள் கிடைக்காமல் போகிறது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹேமா கமிட்டியிடம் பேசிய பெண்கள் பலர் படப்பிடிப்புத் தளங்களில் துணி மாற்றும் அறையோ அல்லது கழிப்பறையோ கூட இல்லை என்றும் தெரிவித்துள்ளனர். இதை தீவிரமான மனித உரிமை மீறல் என ஹேமா கமிட்டி சுட்டிக் காட்டுகிறது.

ஹேமா கமிட்டி அறிக்கை வெளியான பிறகு மலையாள நடிகர் சங்கத்தின் தலைவரான மோகன்லால் தன்னுடைய பதவியை இராஜினாமா செய்தார். அவருடன் பலரும் இராஜினாமா செய்தனர்.

அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது போன்று அனைத்தையும் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் அதிகாரக் குழு எதுவும் இல்லை என்று மோகன்லால் தெரிவித்தார்.

மம்முட்டி தனது முகநூல் வாயிலாக ஹேமா கமிட்டி குறித்து கருத்துத் தெரிவித்திருந்தார். மோகன்லாலை போலவே அவரும் மலையாள திரைத்துறையில் அதிகாரக் குழு ஒன்றும் இல்லை என்று தெரிவித்தார்.

ஹேமா கமிட்டியின் அறிக்கையை வரவேற்ற அவர், அதில் குறிப்பிட்டிருக்கும் பரிந்துரைகளை உடனே அமுல்படுத்த ஆதரவு வழங்குவதாகவும் குறிப்பிட்டார்.

மலையாள சினிமாவில் பாலியல் தொல்லை தொடர்பான ஹேமா கமிட்டி அறிக்கை வெளியாகி மலையாள திரையுலகில் சலசலப்பை ஏற்படுத்தி உள்ள நிலையில், இதுகுறித்த சி.பி.ஐ விசாரணைக்கு உத்தரவிடக் கோரி கேரள உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே மலையாள திரையுலகின் பாலியல் சர்ச்சைகள் குறித்து, கேரள மாநிலம் கொச்சியிலும், திருவனந்தபுரத்திலும் என இதுவரை 6 வழக்குகள்பதிவு செய்யப்பட்டுள்ளன. இது திரையுலக பிரபலங்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்தியா முழுவதும் உள்ள நடிகர், நடிகைகளுக்கு பெரும் புகழை சம்பாதித்து தருவது திரையுலகம். ஆனால், அந்தப் புகழுக்கு இடையில் பல்வேறு அத்துமீறல்களும் அரங்கேறி வருகின்றன. புகழுக்காக ஏக்கும் நடிகைகள் பலர் பலரது ஆசைகளுக்கு பலியாகி சீரழிந்து வருகின்றனர். ஏராளமான பாலியல் சம்பவங்களும் திரைமறைவில் நடைபெற்று வருகின்றன. இதை 'அட்ஜஸ்ட்மென்ட்' என்று சொல்லி வருகிறார்கள். ஆனால், பல நடிகைகள் திட்டமிட்டே பிரபல நடிகர்கள், தயாரிப்பாளர்கள் உள்பட பல திரையுலக பிரமுகர்களின் ஆசைக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர். இது தொடர்பான புகார்கள் அவ்வப்போது வெளியே வந்தாலும், நடிகைகளின் எதிர்காலம் கருதி அவை உடனே சமரசம் செய்யப்பட்டுவிடும்.

இந்த நிலையில் ஹேமா கமிட்டி அறிக்கையில் பாலியல் சம்பவங்கள் தொடர்பான பல்வேறு தகவல்கள் வெளியாகி மலையாள திரையுலகத்தையே புரட்டிப்போட்டுள்ளது.

நடிகர் சங்கத் தலைவர் பதவியில் இருந்து மோகன்லால் உள்பட பல நிர்வாகிகள் பதவி விலகிய நிலையில் நடிகர்கள் ஜெயசூர்யா, இடவேள பாபு, முகேஷ் எம்.எல்.ஏ., மணியன் பிள்ளை ராஜு உட்பட 7 பேர் மீது பாலியல் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக பல வழக்குகள் பதியப்பட்டு உள்ளன. இதில் 6 வழக்குகள் கொச்சியிலும், ஒரு வழக்கு திருவனந்தபுரத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மலையாள திரையுலகில் நடிகைகளுக்கு பாலியல் தொல்லை தரப்பட்டது தொடர்பாக சி.பி.ஐ. விசாரிக்கக்கோரி கேரள உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இரு இளம் வழக்கறிஞர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில், ஹேமா கமிட்டி அறிக்கையை கடந்த 5 ஆண்டுகளாக பினராயி விஜயன் தலைமையிலான அரசு கிடப்பில் போட்டுள்ளதாக குற்றம் சாட்டி உள்ளனர்.

இந்த அறிக்கையை மக்கள் மன்றத்தில் வெளியிடாமல் வைத்திருப்பது தனியுரிமை மீறிய செயல் என்றும், இதன்மீது சட்ட நடவடிக்கை எடுக்காதது கண்டிக்கத்தது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளதுடன், ஹேமா கமிட்டி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் மற்றும் ஹேமா கமிட்டி அறிக்கையின் திருத்தப்பட்ட பக்கங்களில் ஏதேனும் இருந்தால் வெளிப்படுத்தப்பட்ட குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை நடத்த சிறப்பு நீதிமன்றத்தை அமைக்க வேண்டும் என்று கோரியுள்ளனர்.ஏற்கனவே ஹோமா கமிஷனின் அறிக்கை தொடர்பாக கேரள அரசு சிறப்பு புலனாய்வுக்குழு அமைத்து விசாரணை நடத்தி வரும் நிலையில், சி.பி.ஐ விசாரணை கோரி மனுத்தாகக்ல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஹேமா கமிஷனின் அறிக்கை மலையாள திரையுலகில் சலசலப்பை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து, தமிழ், தெலுங்கு உள்ளிட்ட திரையுலகில் பாலியல் வன்கொடுமை தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து நடிகைகள் தங்களது ஆதங்களை தெரிவித்து வருகின்றனர்.

# எழுத்தாளர் திக்குவல்லை ஸூம்ரி எழுதிய சிறுகதைகளின் தொகுப்பு நூல் வெளியீடு

நாடறிந்த எழுத்தாளரும், நாடக ஆசிரியரும், வானொலிக் கலைஞருமான திக்குவல்லை ஸூம்ரியின் 'நட்பு' எனும் சிறுகதைத் தொகுதி வெளியீட்டுவிழா கடந்த வாரம் கொழும்பு 10 மருதானை தபால் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரபல எழுத்தளார் திக்குவல்லை கமால் தலைமை வகித்தார். பிரதம அதிதியாக கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் கலந்து கொண்டார். கௌவர அதிதியாக தொழிலதிபர் ரம்சி அமானுல்லாஹ், விசேட அதிதியாக என்.எம்.எம்.ஹிஸ்புல்லாஹ், சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ், சட்டத்தரணி ரம்சீன், சால்தீன் எம். ஸப்ரி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



வரவேற்புரையை திக்குவல்லை ஸப்வான், தலைமையுரை திக்குவல்லை கமால், நூலாசிரியர் அறிமுகத்தினை ஊடகவியலாளர் சுகையில், வாழ்த்துக் கவிதைகளை கவிஞர் எம். எஸ்.அப்துல் லத்தீப், வெலிகம ரிம்சா முஹம்மத், சிறுகதை நூலாய்வினை கலாநிதி எம்.சி ரஸ்மின் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து சஞ்சாரம் பிஞ்சு மனம் நிகழ்ச்சிகளை ஸஹாரா இஸ்பஹான், இஸ்ஸா இஸ்பஹான், நட்பு சிறுகதைத் தொகுதியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு கதையை வானொலிக் கலைஞர்களான சில்மியா ஹாதி மற்றும் ஜூனைத் எம் ஹாரிஸ், ஆகியோர் வழங்கினார்கள். நூலின் முதற்பிரதியை தனது தாயாருக்கு ஸூம்ரி வழங்கி வைத்தார். விசேட பிரதி கலாநிதி ரமசி அமானுல்லாஹ்வுக்கு வழங்கப்பட்டது.

வானொலி சஞ்சாரம் சமூகச் சித்திரம் நிகழ்ச்சி வானொலிக் கலைஞர்களான மஹ்திஹஸன் இப்ராஹீம், நேரஹம் சஹீட், திக்குவல்லை ஸப்வான் ஆகியோர் கலைநிகழ்ச்சியை மேடையேற்றினார்கள். ஏற்புரையை திக்குவல்லை ஸூம்ரி வழங்கினார்.

நிகழ்ச்சியை ரஸ்மி மௌலானா, மற்றும் பாத்திமா ரீசா ஹூசைன் ஆகியோர் தொகுத்து வழங்கினார்கள். மண்டபம் நிறைந்த வருகையாளர்கள் காணப்பட்டனர். அத்துடன் சகலரும் நூல்களைப் பெற்றுக் கொண்டனர். நிகழ்சி முடிவடைந்ததும் சகலருக்கு மதியபோசன விருந்து வழங்கப்பட்டது.

இந்நூல் வெளியீட்டில் கலை நிகழ்ச்சிகள், கவி வாழ்த்துக்கள், இசை, நாடக நிகழ்வுகளும் வானொலி கலைஞர்களினால் சிறப்பாக நடத்தப்பட்டன. திக்குவல்லை ஸூம்ரி மாணவர் பருவத்திலேயே இலக்கியத்தில் பிரகாசிப்பவர், இவர் தேசிய ரீதியிலான சிறுகதைப் போட்டிகளில் வெற்றி பெற்று பெயர் பதித்தவர், வானொலி முஸ்லிம் சேவைக்கு நிறையவே பங்களிப்பு வழங்கியவர்.

திக்குவல்லை எனும் ஊரின் பெயரை இலக்கிய உலகுக்கு கொண்டு சென்றவர். வானொலியில் நாடகங்கள் எழுதிய சாதனையாளர். சுமார் பத்து வருடங்களாக ஒளிபரப்பாகி வரும் சஞ்சாரம் நிகழ்ச்சிக்கு அதிகமான பிரதிகள் எழுதியவர்.

வானொலி முஸ்லிம் சேவையின் கலைஞரான இவர் இலக்கிய விழாக்களை தொகுத்து வழங்குவதில் தன்னிகரற்றவர். சிறந்த ஓவியர். பாடகரான இவர் பல்கலைக்கழக பட்டதாரியாவார். இலங்கை துறைமுக அதிகார சபையில் நிறைவேற்றுத் தரத்திலும் பதவி வகிப்பவர்.

**அஷ்ரப் ஏ சமத்...**

# நாத்தாண்டி ஐயனார் ஆலய மஹா கும்பாபிஷேகம்



நாத்தாண்டி ஸ்ரீ பூர்ணா புஸ்கலா சமேத ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 8 ஆம் திகதி சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சபரிமலைக் குருமுதல்வர் ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

கடந்த 4 ஆம் தகதி புதன்கிழமை விநாயகர் வழிபாட்டுடன் பூஜைகள் ஆரம்பமாகின. நேற்று விசேட பூஜைகள் நடைபெற்றதோடு இன்று சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் பூஜைகள் ஆரம்பமாகி காலை 7.00 மணிமுதல் பிற்பகல் 4.00 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

இதனைத் தொடர்ந்து நாளை 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் ஆரம்பமாகும் பூஜைகளையடுத்து காலை 9.45 மணியளவில் தூபி அபிஷேகம், பிரதான கும்ப வீதிவலம், புஸ்பாஞ்சலி மூலாலயப் பிரவேசத்தினைத் தொடர்ந்து முற்பகல் 10.22க்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெற்று நண்பகல் 12.00 மணிக்கு மகேஸ்வர பூஜை இடம்பெறும்.

நாதாண்டி ஸ்ரீ ஐயனார் ஆலயம் சுமார் 150 வருடங்கள் வரலாற்றைக் கொண்டதாகும். இந்து, பௌத்த அடியார்கள் மிகுந்த பக்தி சிரத்தையுடன் பூஜை வழிபாடுகளில் ஒற்றுமையாக கலந்து கொள்ளும் கோயிலாக இக்கோயில் விளங்குகின்றது. இக்கோயிலில் வருடாந்த உற்சவங்கள், நித்திய பூஜைகள், கிரியைகள் ஆகமவிதிப்படி நடத்தப்படுகின்றன.

இப் பூஜை வழிபாடுகள் அலங்காரப் பணிகளை சிறப்புடன் நடத்துவதற்கு பக்த அடியார்களாகளின் ஒத்துழைப்பும் பொருள் உதவியும் பண உதவிகளும் எதிர்பார்க்கப் படுகின்றன.

ஆலய நிர்வாகத்தினர் மிகுந்த சிரமத்துடனும் பக்தியுடனும் கோவில் திருப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர். அதனை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு பக்த ர்களும் இந்த புண்ணிய காரியத்தில் இணைந்து ஸ்ரீ ஐயனார் திருவருளைப் பெற்றுய்யுமாறு வேண்டிக் கொள்வதாக ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.நாத்தாண்டி ஐயனார் ஆலய மஹா கும்பாபிஷேகம்

# அகத்தினை தூய்மையாக வைத்துக்கொள்ள அற்புதமான பயிற்சி தியானம்

### ஸ்ரீ சிவகிருபானந்த சுவாமி



அகத்தினை தூய்மையாக வைத்துக்கொள்ள அற்புதமான பயிற்சி தியானம். இதை முறைப்படி செய்வதன் மூலம் தனக்குள்ளிருக்கும் ஆத்துமாவை அறியமுடிவதுடன் தனக்குத்தானே வழிகாட்டியாகவும் இருக்கமுடியுமென ஸ்ரீ சிவகிருபானந்த சுவாமி தெரிவித்தார்.

அண்மையில் இலங்கை வந்த இந்தியாவைச் சேர்ந்த ஸ்ரீ சிவகிருபானந்த சுவாமி ஒருமித்த உலகின் அமைதி எனும் தொணிப்பொருளில் கொழும்பு, குருனாகல் மற்றும் காலி ஆகிய பகுதிகளில் தியானம் மற்றும் அதன் மகத்துவம் பற்றி தெளிவுபடுத்தியதோடு செயன்முறையிலான பயிற்சியினையும் வழங்கியிருந்தார்.

அது தொடர்பில் தெளிவுபடுத்திய ஸ்ரீ சிவகிருபானந்த சுவாமி,

பொதுவாக யோகாசனம் என்பது இன்று பல நாடுகளிலும் பின்பற்றப் படுகின்ற ஒன்றாக உள்ளது. இது ஒரு உடற்பயிற்சி அம்சமாகும். அதாவது உடலை அழகாக கட்டமைப்புடன் வைத்துக்கொள்ள இது உதவுகிறது. ஆனால் தியானத்தின் ஊடாக உள்ளத்தை அதாவது அகத்தினை தூய்மையாக வைத்துக்கொள்ள முடியும். இவ்வாறு அகத்தினை தூய்மையாக வைத்துக்கொள்ளும்போது வாழ்க்கையில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் ஏற்படுகிறது. அதனூடாக அமைதியான உலகை உருவாக்கலாம்.

இன்றைய பரபரப்பான வாழ்க்கை முறையில் அனேகமானோர் மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர். வாழ்க்கையில் பல வெற்றிகளை அடைகின்ற போதும் திருப்தியற்ற மனநிலையில் இருக்கின்றார்கள் தியானத்தின் ஊடாக திருப்தியற்ற மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி அமைதியான மனநிறைவுடன் கூடிய வாழ்க்கையை பெற்றிடலாம்.

தியானத்தில் ஒரு எளிதான யுக்தி சமர்ப்பணத் தியானமாகும். யோக நிலைகள், மூச்சுப் பயிற்சிகள் போன்றவை இதில் இல்லை. எனவே யார் வேண்டுமானாலும் இதை மிகவும் எளிதாக செய்ய முடியும். வயது வித்தியாசமோ, அல்லது தனிப்பட்ட வாழ்க்கை முறையோ அல்லது அவர் எவ்வாறான பலக்கவழக்கங்ளை கொண்டவராக இருந்தாலும் அவர் அந்த தியான முறையை பின்பற்றலாம். அதற்கு எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லை.

இந்த பிரஞ்ச சக்தியோடு அவரவருக்கான அனுபவத்தை பெறுவதற்கு இது ஒரு சிறந்த வழியாகும். மனதைத் தெளிவுபடுத்தி ஒருவருடைய ஆத்மாவோடு இணைப்பதற்கான ஒரு யுக்தியே தியானமாகும். ஒருவருடைய வாழ்க்கையில் மகிழ்ச்சியையும் நல்ல இணக்கத்தையும் தியானத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம் தியானத்தின் ஊடாக இறந்தகால சம்பவங்கள் பற்றிய அச்சநிலைகளையும் வருங்காலம் பற்றிய கவலைகளையும் துறக்க முடிவதுடன் தியானம் செய்பவர் பிரஞ்ச சக்தியோடு தன்னை இணைத்துக்கொள்கிறார்.

இந்த சக்தியானது அவருடைய உடல், மனம் மற்றும் ஆத்மாவைத் தூய்மையாக்குகிறது. ஆகையால் சலனமற்றதொரு நிலையை அடைந்து அவரால் ஆழ் தியான நிலையை அடையமுடிகிறது. சமர்ப்பணத் தியாணம் முழுமையானதொரு தியான வழிமுறையாகும். உடலிலுள்ள மூன்று நாடிகளையும் ஏழு சக்தி மையங்களையும் ஈடுபடச்செய்கிறது. இவ்வாறு முறையாக தியானம் செய்வதன் ஊடாக தனக்குள்ளிருக்கும் ஆத்துமாவை அறியமுடிவதுடன் தனக்குத்தானே வழிகாட்டியாக மாறமுடிகிறது எனவும் ஸ்ரீ சிவகிருபானந்த சுவாமி தெரிவித்தார்.

## இன்றைய பலன்கள் (07.09.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
குடும்பத்தில் அவ்வப்போது சிறு பிரச்சினைகள் தோன்றி மறையும். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கப்பெறும்.

**ரிஷபம் :**
கூட்டுத் தொழில் லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் பணவரவிற்கு குறைவு இருக்காது.

**மிதுனம்:**
குடும்பத்தில் சுபகாரியங்கள் சிறு தடங்கலுக்கு பின் சிறப்பாக நடைபெறும். கலைஞர்கள் வாழ்வில் புதிய திருப்பம் உண்டாகும்.

**கடகம்:**
எதிர்கால முன்னேற்றத்திற்கான திட்டங்களை தீட்டுவீர்கள். குடும்பத்தில் பணவரவு அதிகமாகும்.

**சிம்மம்:**
குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் இருக்கத்தான் செய்யும். கலைஞர்கள் புதிய வாய்ப்பினைப் பெற்றாலும் எதிர்பார்க்கும் வருமானம் இருக்காது.

**கன்னி:**
சொந்த தொழிலில் பொறுப்புக்கள் அதிகரிக்கும். கூட்டுத்தொழில் செய்பவர்கள் கூட்டாளிகளின் ஆலோசனைகளுக்கு மதிப்பளிப்பது அவசியம்.

**துலாம்:**
பணிகளில் அதிக கவனம் செலுத்தினால் லாபம் பெருகும். குடும்பத்தில் புதிய கடன் வாங்கி பழைய கடனை தீர்க்கும் நிலை ஏற்படும்.

**விருச்சிகம்:**
கலைத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு பணவரவு தாமதமாகலாம். சுப காரிய நிகழ்ச்சி நடைபெற முயற்சி மேற்கொள்வீர்கள்.

**தனுசு:**
உங்கள் பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். குடும்பத்தில் சுப காரிய நிகழ்ச்சி நடைபெற கூடும்.

**மகரம்:**
கூட்டுத்தொழில் பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அவற்றை சாமர்த்தியமாக சமாளித்து விடுவீர்கள் .

**கும்பம்:**
தடை தாமதங்களால் முக்கியமான காரியங்களில் பின்னடைவு வரலாம். கலைஞர்கள் சுறுசுறுப்பாக செயல்படுவர்.

**மீனம்:**
பங்குச்சந்தையில் நல்ல லாபம் கிடைக்க அன்றாட நிலவரங்களை கண்காணிப்பது அவசியம். குடும்பத்தில் பணவரவு அதிகரிக்கும்.

### கைதிகள் வாக்களிக்கும் உரிமை:

# எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து மனித உரிமை ஆணைக்குழு ஆராய்வு



இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக் குழு, சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளின் அதிகாரிகள் ஒன்றிணைந்து சிறைக் கைதிகள் வாக்களிக்கும் உரிமை தொடர்பாக எதிர்கொள்ளும்சவால்கள்குறித்துகவனம் செலுத்தியுள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலின்போது, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சட்டரீதியாக தகுதியுள்ள கைதிகள் பங்குபற்றுவதிலுள்ள நடைமுறைத் தடைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

## மார்ச் 12 அமைப்பின்...

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நடைபெறவுள்ளதாக Paffaral அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

அதன்படி, இன்றைய நிகழ்வில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச, நாமல் ராஜபக் ஷ, திலித் ஜயவீர மற்றும் பி.அரியநேத்திரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

மேலும், 16 வேட்பாளர்கள் இதில் பங்கேற்பதை உறுதி செய்துள்ளனர். இன்று (07) பிற்பகல் 03 மணி முதல் 05 மணி வரை, இந்த கலந்துரையாடல் அனைத்து தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் 200 க்கும் மேற்பட்ட சமூக ஊடக வலையமைப்புகளிலும் நேரடியாக ஒளிபரப்பப்படும்.

நாளை (08) விஜேயதாச ராஜபக் ஷ, நுவன் போபகே, சரத் மனமேந்திரா, அனோஜ் டி சில்வா, பிர யந்த விக்கிரமசிங்க, பாணி விஜேசிறிவர்தன, மயில்வாக ன ம திலகராஜா ஆகியோர் கலந் து கொள்ளவுள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் பங்கேற்பதை இதுவரை உறுதிப்படுத்தவில்லையென ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

## "ரணிலை அறிந்து கொள்வோம்"...

ஊடாக, அரசியல், சமூக மற்றும் கலாசார ரீதியில் ரணில் விக்கிரமசிங்கவின் பாத்திரத்தை மக்களுக்கு அறிந்துகொள்ள வாய்ப்பளிக்கப்படும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் "இயலும் ஸ்ரீலங்கா" விஞ்ஞாபனத்தின் உள்ளடக்கம் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் விநியோகம் மற்றும் மக்கள் விழிப்புணர்வு நிகழ்சிகள் இதன் கீழ் ஏற்பாடு செய்யப்படவுள்ளன.

மீண்டும் வரிசையில் நிற்கும் யுகத்தை எதிர்கொள்ளாத வகையில், பொருளாதார ஸ்திரத்தன்மை கொண்ட நாட்டில் மக்களின் எதிர்பார்ப்புகளையும் நம்பிக்கையையும் ஒருங்கிணைக்கும் இந்தப் பிரசாரத்தில் இணையுமாறு அனைத்துத் தரப்பினருக்கும் அழைப்புவிடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாற்றத்தை விரும்பும் தென்னிலங்கை...

யாழ்ப்பாணம் என்பதை கேட்பதற்கு நீங்கள் விருப்பமா? நாங்கள் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்பதை உறுதி செய்கின்றேன். இந்த வெற்றியின் பங்காளிகளாக நீங்கள் இருக்கவேண்டும். அதற்கு எதிரானவர்களாக இருக்க வேண்டாம் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார மேலும் தெரிவித்தார்.

## நுவரெலியா மாவட்டத்தில்...

இதனை தெரிவித்த அவர், இம்முறை ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வரலாற்று ரீதியான வெற்றியை பதிவு செய்வாரெனவும் குறிப்பிட்டுள்ளார்.

## சஜித்துடன் கூட்டுச் சேர்ந்துள்ள...

ஹக்கீம், ரிஷாத் பதியுதீனும் முஸ்லிம் சமூகத்துக்கு வழங்கவேண்டுமென உலமா கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

## அத்தியாவசிய சேவைகளாக...

தொடர்பான அனைத்து சேவைகளையும் அத்தியாவசிய சேவைகளாக அறிவித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது. இந்த சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கும் வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் (5) ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கமைவாக ஜனாதிபதியின் செயலாளர் ஈ. எம்.எஸ்.பி.ஏக்கநாயக்கவினால் வெளியிடப்பட்டுள்ளது.

## திலகரின் தேர்தல் விஞ்ஞாபனம்...

சுரேஷ்குமார் அறிவித்துள்ளார். அர்த்தமுள்ள பிரஜைகள் எனும் தலைப்பில் தேசிய, மலையக விடயப்பரப்புகளை உள்ளடக்கிய இரண்டு பாகங்களைக் கொண்ட இந்தக் கொள்கை அறிக்கை மூன்று மொழிகளிலும் உள்ளடக்கங்களை கொண்டுள்ளது. இதேவேளை, மலையக மண்ணில் இடம்பெறும் வெளியீட்டையடுத்து நாளை மறுதினம் 09 ஆம் திகதி கொழும்பு சர்வதேச பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறும் பகிரங்க விவாத மேடையிலும், 10 ஆம் திகதி அரசாங்க ஊடகத் தகவல் நிலையத்திலிருந்து நேரலையாக நாட்டு மக்களுக்கும் திலகரினால் இந்த கொள்கை பிரடகனம் முன்வைக்கப்படும் என சுரேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

## சுங்கத் திணைக்களத்துக்கு...

நிர்வாகச் செயற்பாடுகள், இடமாற்றங்கள் மற்றும் முழு சுங்க நிர்வாக நடைமுறைகளையும் முறையாகச் செயற்படுத்துவதற்கும், வருடாந்த செயற்றிட்டத்தின் கீழ் முழு சுங்கத் துறையின் தரநிலை மாற்றங்களுடன் நிர்வாகச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அமைச்சர்கள், எம்.பிக்களை...

தேர்தல் தொடர்பாக எடுக்கும் முடிவுகளை எதிர்க்கட்சிகளிடம் கொடுத்து அரசியல் சூதாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கியமான தருணத்தில் ஆதரவளிக்காதவர்களை புறம் தள்ளி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் செயற்பாடுகளை சுதந்திரமாக முன்னெடுப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு, அவர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயங்களை கவனத்திற்கொண்ட பின்னர், உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் 04 இராஜாங்க அமைச்சர்களை பதவியிலிருந்து நீக்குவதற்கு ஜனாதிபதி நேற்று முன்தினம் (05) நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## தேசபந்து தென்னகோனுக்கு...

தேரர்களினால் உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பெல்லன்வில ரஜமஹா விஹாராதிபதி கலாநிதி பெல்லன்வில தர்மரத்ன தேரர், கொள்ளுப்பிட்டி ராகுல தேரர் மற்றும் பேராசிரியர் அகலகட சிறிசுமண தேரர் ஆகியோரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேசபந்து தென்னகோன் பொலிஸ் மாஅதிபராக கடமையாற்றுவதை நிறுத்துமாறு கோரி பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்டோரினால் தாக்கல் செய்யப்பட்ட மனு கடந்த ஜூலை மாதம் 24 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உயர் நீதிமன்றம், தேசபந்து தென்னகோன் பொலிஸ் மாஅதிபராக கடமையாற்றுவதை இடைநிறுத்த இடைக்கால உத்தரவு பிறப்பித்தமை இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவின் காரணமாக, எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவுகளை வழங்க முடியாதிருப்பதாக சுட்டிக்காட்டியுள்ள இடைக்கால மனுதாரர்கள் தேசபந்து தென்னகோன் பதில் பொலிஸ் மா அதிபராக கடமையாற்றியபோது 'யுக்திய' என்ற பெயரில் போதைப் பொருள் ஒழிப்புக்கான நடவடிக்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் செயற்றிறன்மிக்க பொலிஸ் மா அதிபர் எனவும் இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## 20 இலங்கையர்களும்...

திகதியன்று உறுதிப்படுத்தியது. இதன்போது, மீட்கப்பட்ட இலங்கையர் தாய்லாந்துக்கு பாதுகாப்பாக அழைத்து வரப்பட்டு தாய்லாந்தின் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பாதுகாப்பில் இருப்பதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

## மிகப்பெரிய 'EVER ARM'...

கூடிய இக் கப்பலை ஆசியாவின் ஒரு சில துறைமுகங்களால் மட்டுமே கையாளமுடியும். அந்த வரிசையில் கொழும்பு துறைமுகமும் அந்த சிறப்பை கொண்டுள்ளது.

ஆழ் கடல் முனையமாக கிழக்கு முனையம் அபிவிருத்தி செய்யப்பட்டு அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் நவீன உட்கட்டமைப்புகளை ஏற்படுத்தியதனால் இச்சாதனையை இலங்கை வசப்படுத்த முடிந்துள்ளதுதுறைமுக அதிகார சபை தெரிவித்துள்ளது.

## ஊவா மாகாணத்தின் ஆளுநராக...

அநுர விதானகமகே ஊவா மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். அதன்படி, நேற்று (06) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் அவர் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

## தமிழரசு கட்சி சஜித்துக்கு... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இவ்வாறான நிலையில், இறுதியாக நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் சுமந்திரனால் கொண்டுவரப்பட்ட மாகாண சபை தொடர்பான தனிநபர் பிரேரணை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த இந்த ஒத்திவைப்பானது சிலவேளை தமிழரசு கட்சி சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு வழங்கப் போவதான அறிவிப்பு வெளியாகியமை தாக்கத்தை செலுத்தியிருக்கலாம். ஏனெனில், தற்போது ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசாரங்கள் இடம்பெற்று வருவதால், மாகாண சபை தொடர்பான விவாதம் சிலருக்கு தேவையாக இருக்கலாம். மற்றொரு தரப்பினர் அதை விரும்பாமலும் இருக்கலாம். எனினும், தமிழரசு கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கொண்டு வந்த மாகாண சபை தேர்தல் தொடர்பான தனிநபர் பிரேரணை, இறுதியாக நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் எடுத்துக் கொள்ளப்படுகிறதென தெரிந்தும் அதற்கு முன்னரே சஜித் பிரேமதாசவின் ஆதரவு அறிவிப்பை சுமந்திரன் வெளிப்படுத்திவிட்டார் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார்.

## சட்டத்தின் ஆட்சியை... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

ஆனால், 1977 இல் அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரம், விகிதாசார தேர்தல் முறையில் இருந்துவரும் மோசடி போன்ற விடயங்களால் எமது சமூகம் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டது.

அதனால் எமது நாடு மீண்டும் ஆரம்பத்திலிருந்து கட்டியெழுப்பப்பட வேண்டியுள்ளது.

அதற்கான சந்தர்ப்பம் தற்போது கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

## சஜித்துக்கு தமிழரசு... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

ஆனால் பெரும்பான்மையினர் எங்கள் வாக்குகளை பெற்று எங்களை அடக்கி ஆண்டு வந்தனர்.

அதனால் இம்முறை நாங்கள் சுதந்திரமாக வாழ வேண்டுமென்ற சிந்தனையின் அடிப்படையில் தமிழ் பொது வேட்பாளரை களமிறக்கியுள்ளோம். அவர் ஜனாதிபதியாக மாட்டார். ஆனாலும் நாங்கள் அதனூடாக தமிழ் மக்களை ஒன்றிணைக்கும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளோம். எனவே, தமிழ் மக்கள் அனைவரும் தமிழர்களாக சிந்தித்து, எமது ஒற்றுமையை வெளிப்படுத்தும் செயற்பாடாக, தமிழ் பொது வேட்பாளருக்கு நமது முதல் வாக்கை அளிக்க வேண்டுமென கோருவதாக அவர் தெரிவித்தார்.

## தோட்டத் தொழிலாளரின்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் "இயலும் ஸ்ரீலங்கா" மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டம் நேற்று முன்தினம்(5) மத்துகம நகரில், நடைபெற்றபோது, இக்கூட்டத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தன உட்பட அமைச்சர்கள் இராஜாங்க அமைச்சர்கள், முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## நடைமுறைப்படுத்துவதே... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக்கட்சி ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கப்போவதாக அறிவித்திருப்பதால், தமிழ் மக்களுக்கான சமஷ்டி தீர்வு குறித்து அவர் வழங்கிய உத்தரவாதம் என்னவென்று தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் கருத்து வெளியிட்டுள்ள மனோ கணேசன்,மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை தமிழரசுக்கட்சியின் முடிவுகள் குறித்தோ அல்லது அதன் உள் விவகாரங்கள் குறித்தோ நான் கருத்து வெளியிட விரும்பவில்லை. ஆனால் அரசியலமைப்பிலிருக்கும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக சஜித் பிரேமதாச தேர்தல் பிரசார மேடைகளில் பகிரங்கமாக வாக்குறுதியளித்திருக்கின்றார் என மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

## வங்குரோத்தான ஒரு நாட்டை...

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், "உலக வரலாற்றில் எந்த ஒரு நாடும் ஒன்றரை வருடத்தில் வங்குரோத்து நிலையிலிருந்து வெளியே வரவில்லை. அதனால் தான் ஒன்றரை வருட உலக வரலாற்றில் வங்குரோத்தான நாட்டை மீட்ட தலைவர் என்று ரணில் விக்கிரமசிங்க சாதனை புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளார்.

# கிழக்கின் குரல்



## யானைத் தாக்குதலினால் சேதமடைந்த மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மனாலயம்

(நிந்தவூர் தினகரன் நிருபர்)

நிந்தவூர் பிரதேசத்துக்குட்பட்ட மாட்டுபளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மனாலயம் யானைத்தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

இச்சம்பவம் நேற்று (06) வெள்ளிக்கிழமை அதிகாலை நடுநிசியில் இடம்பெற்றுள்ளது.

நடுநிசியில் ஆலயவளாகத்தினுள் புகுந்த யானை அங்கிருந்த களஞ்சிய சாலையை தும்பிக்கையால் உடைத்துள்ளது. அங்கிருந்த பொருட்களும் சேதமடைந்துள்ளதுடன் கட்டடம் பயன்படுத்தமுடியாத அளவு வெடித்துள்ளது. யானைகளால் வேளாண்மை அறுவடை முடிந்த பின்னர் அடிக்கடி இவ்வாறு சேதங்கள் ஏற்படுவது வழமையாகவே இடம்பெற்றுவருகின்றது.



இதுதொடர்பில் ஆலய பரிபாலன சபைத்தலைவர் கலாநிதி கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் ஊடகங்களுக்கு கூறுகையில்:

நேற்று நடுநிசியில் யானைகள் புகுந்து இந்த அட்டூழியத்தை செய்துள்ளது.

வயல்களுக்கு மத்தியில் இவ்வாலயம் இருப்பதால் ஆலயத்தைச் சுற்றி கம்பிவேலி அமைத்து மின்விளக்குகள் பொருத்தப்படவேண்டும்.

அரசாங்கம் பாதுகாப்பை ஏற்படுத்துவதுடன் நட்டஈட்டையும் தர நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் தெரிவித்தார்.

## ஏறாவூரில் 158 ஆவது தேசிய பொலிஸ் தின விஷேட துஆ பிரார்த்தனை





(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

இலங்கையின் 158ஆவது தேசிய பொலிஸ் தினத்தை முன்னிட்டு விசேட துஆ பிரார்த்தனை நிகழ்வு கடந்த செவ்வாய்கிழமை (3) ஏறாவூர் முகைதீன் ஜும்ஆ பள்ளிவாசலின் தலைவர் எஸ். எல்.எம். நழீம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஏறாவூர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பியந்த, ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹர்சடி சில்வா உட்பட பொலிஸ் நிலையத்தின் உப பரிசோதகர்கள், பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள்,உலமாக்கள்,பள்ளிவாசல் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர் .

இலங்கை காவல்துறையினருக்கு நீண்ட ஆயுள் வேண்டியும் நாட்டுக்காக நல்ல பல சேவைகள் தொடரவும் விஷேட பிரார்த்தனை நிகழ்வுகள் இதன்போது நடைபெற்றன.

## விழிப்புணர்வு நிகழ்வு

(பாலமுனை தினகரன் நிருபர்)

பொத்துவில் சுகாதார வைத்திய காரியாலயத்துக்குட்பட்ட முச்சக்கர வண்டிகள் சங்கத்தினருக்கான 'பாலியல் ஆரோக்கியம்' தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு வைத்திய அதிகாரி காரியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி உவைஸ் பாறூக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய பாலியல் ஆரோக்கியத்துக்கு பொறுப்பான வைத்தியர் வைத்திய கலாநிதி ஜலால்தீனின் ஒழுங்கமைப்பில் பொதுசுகாதார மேற்பார்வை உத்தியோகத்தர் எம். எஸ்.எம்.மலீக் உட்பட பொதுச்சுகாதார பரிசோதகர்களும் கலந்து கொண்டனர்.

## மட்டக்களப்பில் தபால்மூல வாக்களிப்பு சுமுகம்



(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)

ஜனாதிபதி தேர்தலின் 2 ஆம் நாள் தபால்மூல வாக்களிப்பு மட்டக்களப்பில் வெற்றிகரமாக நேற்று நடைபெற்றது. மட்டக்களப்பு மாவட்ட வலயக்கல்வி அலுவலகங்கள், பிரதேசசெயலகங்கள் மற்றும் மட்டக்களப்பு தேர்தல் பணிமனையில் இந்த தபால்மூல வாக்களிப்பு நேற்று சிறப்பாக நடைபெற்றது.

இம்மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு 13 ஆயிரத்து 116 பேர் தகுதி பெற்றுள்ளதாகவும் தபால்மூல வாக்களிப்பு சுமுகமாக நடைபெறுவதற்கு தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை பொலிஸ் திணைக்களம் செய்திருப்பதாகவும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் மாவட்ட அரசாங்க அதிபருமான திருமதி ஜஸ்டினா முரளிதரன் தெரிவித்தார்.

இந்த தபால் மூல வாக்களிப்பு நிலையங்களுக்கு தேர்தல் கண்காணிப்பாளர்கள் மற்றும் தேர்தல் மேற்பார்வை அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்களின் தேர்தல் முகவர்களும் வாக்களிப்பு நிலையங்களில் சமூகமளித்திருப்பதாகவும் மாவட்ட தெரிவாத்தாட்சி அலுவலர் ஜஸ்டினா முரளிதரன் மேலும் தெரிவித்தார்.

## தேர்தல் இணைப்பு அலுவலகம்

கல்முனையில் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் இணைப்பு அலுவலகம் நேற்று (6) வெள்ளிக்கிழமை நற்பிட்டிமுனையில் திறந்து வைக்கப்பட்டது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பேராசிரியர் முருகேசு ராஜேஸ்வரனின் இல்லத்தில் பணிமனை நேற்று திறந்து வைக்கப்பட்டது.

அச்சமயம் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மஞ்சுள பெர்னான்டோ காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் த.மோகனதாஸ் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

## திருமலையிலிருந்து வெருகல் நோக்கிய ஏழு நாள் பாதயாத்திரை ஆரம்பம்

(காரைதீவு குறூப் நிருபர்)

திருகோணமலையிலிருந்து வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வெருகலம்பதி ஸ்ரீ சித்திர வேலாயுதர் சுவாமி ஆலயத்தை நோக்கிய ஏழு நாள் பாத யாத்திரை நேற்று 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமானது.

வரலாற்று பிரசித்தி பெற்ற திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற விசேட பூஜைகளையடுத்து பாத யாத்திரை ஆரம்பமானது.

செல்வச்சந்நிதி கதிர்காமம் பாத யாத்திரை குழுவின் தலைவர் ஜெயா



வேல்சாமி உள்ளிட்டோரும் இப்பாதயாத்திரையில் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

இவர்கள் ஏழு நாள் பயணித்து எதிர்வரும் 12ஆம் திகதி வெருகலை சென்றடையவிருக்கின்றனர்.

## ஈஸ்டர் தாக்குதலினால் மூடப்பட்டிருந்த காத்தான்குடி பள்ளிவாசல் மீண்டும் திறப்பு





(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

ஈஸ்டர் தாக்குதலையடுத்து காத்தான்குடியில் மூடப்பட்டிருந்த ஜாமியுல் அதர் பள்ளிவாசல் நேற்று(06) வெள்ளிக்கிழமை அதிகாலை தொழுகைக்காக திறக்கப்பட்டு தொழுகை நடாத்தப்பட்டது.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுத் தாக்குதலையடுத்து 2021 ஆண்டு இப் பள்ளிவாசல் மூடப்பட்டது. இந்நிலையில் இப் பள்ளிவாசலை ஐந்து வேளை தொழுகைக்காக திறந்து தருமாறு பொதுமக்கள், நலன் விரும்பிகள் காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்திடம் வேண்டுகோள் விடுத்தனர்.

கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் முபீன் உட்பட பல அரசியல் பிரமுகர்கள் இவ்விடயத்தை பல்வேறு முஸ்லிம் அரசியல் தரப்புகள், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்தை கொண்டு சென்றனர்.

இதனையடுத்து மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹீர் மௌலானா மேற்கொண்ட முயற்சியினால் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்றார்.

ஜனாதிபதி இப்பள்ளிவாசலை திறந்து ஐந்து வேளை தொழுகைக்காக அனுமதிக்குமாறு உத்தரவிட்டதையடுத்து நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை சுபஹுத் தொழுகையோடு தொழுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதிகாலை சுபஹ் தொழுகையை காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன பொதுச் செயலாளரும் புதிய காத்தான்குடி பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலின் (அல் அக்ஸா ஜும்ஆப் பள்ளிவாயல்) இமாமுமான அஷ் ஷெய்க் இல்ஹாம் பலாஹி நடாத்தினார்.

இதனையடுத்து இப்பள்ளிவாசலுக்கு நேற்று காலை விஜயம் செய்த அபிவிருத்தி அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அலி சாகிர் மௌலானா, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் முபின் உட்ட பலர் பள்ளிவாசலை பார்வையிட்டனர்.

## முஹைதீன் அப்துல் காதர் பொது மைதானத்தில் அமீர் அலி அரங்கை பாவிப்பதற்கு முற்றாகத்தடை

(கல்குடா தினகரன் நிருபர்)



ஓட்டமாவடி முஹைதீன் அப்துல் காதர் பொது மைதானத்தில் அமைந்துள்ள அமீர் அலி அரங்கை பாவிப்பதற்கு முற்றாகத்தடை செய்யப்பட்டுள்ளதுடன் அதுதொடர்பிலான எச்சரிக்கை பதாகை குறித்த கட்டடத்தில் ஒட்டப்பட்டுள்ளது.

சேதமடைந்து காணப்படும் குறித்த அரங்கை ஆய்வு செய்யும் நோக்கில் நேற்றுமுன்தினம் மாலை களவிஜயம் மேற்கொண்ட ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஏ.தாஹிர், பிரதேச சபை செயலாளர் எஸ். எம்.சஹாப்தீன் தலைமையிலான குழுவினர் மைதானத்தில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டதுடன், சேதமடைந்து உடைந்து காணப்படும் அரங்கு தொடர்பிலும் கவனம் செலுத்தியிருந்தனர்.

குறித்த அரங்கின் தரம், தன்மை போன்றன தொடர்பிலான அறிக்கையைப் பெறும் நோக்கில் கட்டடத்தின் பகுதிகள் பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அதுவரை குறித்த கட்டடத்தை எந்தவித தேவைக்கும் பயன்படுத்த வேண்டாமென கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மைதானத்தைப் பயன்படுத்தும் நூற்றுக்கணக்கான வீரர்கள், பார்வையாளர்கள் குறித்த அரங்கைப் பயன்படுத்தி வருவதுடன், இவ்வாறு சேதமடைந்து காணப்படும் நிலையில் அதிகமானோர் அரங்கில் அமரும் பட்சத்தில் உயிராபத்துக்களையும் ஏற்படுத்த வாய்ப்புள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

பிரதேச விளையாட்டுக்கழகங்களை வலுப்படுத்தி விளையாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் பிரதேச செயலாளர் ஏ.தாஹிர் தலைமையில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஏ.தாஹிர், பிரதேச சபை செயலாளர் எஸ்.எம்.சஹாப்தீன் ஆகியோர் தலைமையில் பிரதேச விளையாட்டுக்கழகங்களுடன் கலந்துரையாடல் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதன்போது கழகங்கள் மற்றும் வீரர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பொது மைதானத்தைப் பயன்படுத்துவதிலுள்ள சிக்கல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், இக்கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் குறித்த கள ஆய்வு விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது, ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஏ.தாஹிர், பிரதேச சபைச்செயலாளர் எஸ். எம்.சஹாப்தீன், பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ஏ.எம்.றியாஸ், பிரதேச சபை பிரதம இலிகிதர் எஸ். எம்.நௌபர், விளையாட்டு உத்தியோகத்தர் ஏ.ஐ.எம்.அலி மற்றும் விளையாட்டுக்கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

## ஆலிம் நகர் பகுதியில் வீட்டுத்தோட்டங்களை மேம்படுத்த விசேட நடவடிக்கை

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)



அக்கரைப்பற்று ஆலிம் நகர் விவசாய விரிவாக்கல் நிலையத்தினால், அப்பிரதேசத்திலுள்ள வீட்டுத்தோட்டங்களை மேம்படுத்தும் நோக்கில் விசேட பயிற்சி நெறியும், வீட்டுத்தோட்ட செய்கையில் ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு இலவச பயிர் விதைகளும் கடந்த 4ஆம் திகதி ஆலிம்நகர் விவசாய விரிவாக்கல் நிலையத்தில் வைத்து விவசாய போதனாசிரியர் ஏ.ஜீ.பிர்னாஸ் ஹாரீஸ் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது.

பாடவிதான உத்தியோகத்தர் சுந்தரமூர்த்தியினால் வீட்டுத்தோட்ட பயிற்சி செய்கை தொடர்பான பூரண பயிற்சிகளும், அதனை எவ்வாறு மேம்படுத்தல் போன்ற ஆலோசனைகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பாடவிதான உத்தியோகத்தர் சுந்தரமூர்த்தி, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.எல்.தையுப் உட்பட விவசாயிகளும் கலந்து கொண்டனர்.

## விவாத போட்டியில் சாதித்தது மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)



திருகோணமலை ஆர்.கே.எம். ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கும் மட்டக்களப்பு, கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரிக்கும் இடையில் திருகோணமலையில் நடைபெற்ற சொற்சமர் போட்டியில் தற்போதைய கையடக்க தொலைபேசி பாவனை மாணவர்களுக்கு நன்மை பயக்கும் எனும் தலைப்பில் வாதிட்ட மட்டக்களப்பு, கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரி மாணவர் அணி வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது.

சொற்சமர் போட்டியில் மட்டு சிவானந்தா தேசிய கல்லூரி மாணவர்களான ஏகலைவன் அட்சரன், பிறேமகுமார் அகிலேஸ்,மதியழகன் சதுசன் மற்றும் ஜோஜ்குமார் யோவு ஆகியோர் திறமையாக வாதத்திறமைகளை வெளிக்காட்டி இவ்வருடத்துக்கான வெற்றியை தமதாக்கிக் கொண்டனர்.

திருமதி கஜேந்தினி பத்மநாதன் சேவியரின் நெறியாள்கையில் மாணவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கல்முனை பிராந்திய வைத்தியசாலைகளில் என்பு முறிவு வைத்தியர்களுக்கு பற்றாக்குறை

(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)



அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் என்பு முறிவு சிகிச்சைக்கென அதிகமானோர் வருகை தருவதாக தெரிவிக்கின்றனர்.

கல்முனை பிராந்திய கரையோர வைத்தியசாலைகள் பலவற்றில் என்பு முறிவு விசேட வைத்திய நிபுணர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பாலமுனை பிரதேசங்களிலிருந்தே அதிகளவானோர் சிகிச்சைக்கு வருகின்றனர்.

அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் கடமை புரியும் விசேட வைத்திய நிபுணர் அக்கரைப்பற்று சம்மாந்துறை வைத்தியசாலைக்கு பதில் கடமைக்காக சென்று வருவதாகவும் தெரியவந்துள்ளது.

வருகைதரும் நோயாளிகள் அனைவரும் விசேட வைத்திய நிபுணரால் பார்வையிடப்படுகின்றனர்.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் பதில் கடமை நிமித்தம் விசேட வைத்தியர் ஒருவர் வாரத்தில் ஒருநாள் வருகை தருவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.




## இளைஞர்களையும் இ.தொ.காவையும் பிரிப்பதற்கு சதித்திட்டம் சிந்தித்து செயற்பட வேண்டும் என்கிறார் அமைச்சர் ஜீவன்

(பொகவந்தலாவ நிருபர்)



மலையக இளைஞர்களுக்கும் இ.தொ.கா.வுக்கும் உள்ள உறவை பிரிப்பதற்கு சதிதிட்டம் தீட்டி வருவதால் மலையக இளைஞர்கள் சிந்தித்து செயற்பட வேண்டுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர்வளங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு சமூக அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்

எட்டியாந்தோட்ட பகுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து ஏற்பாடு செய்யப்பட்ட தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு அங்குள்ள மக்கள் மத்தியில் உறையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

பெருந்தோட்ட பகுதியிலுள்ள தொழிலாளர்கள் மாத்திரம் அட்டை மற்றும் பாம்பு கடிகளுக்கு தொடர்ந்தும் உள்ளாகி வருகின்றனர்.

மலையகத்திலுள்ள முன்னாள் அமைச்சருக்கு பொறிமுறை பற்றிகூட பேச தெரியவில்லை இவர்கள் நேரத்திற்கு ஏற்றவாறு மாறிகொண்டு கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

மலையக மக்களுக்கு புதிய முறையை ஏற்படுத்தி தரும் வரை பெருந்தோட்ட நிறுவனங்கள் நியாயமான சம்பளத்தை வழங்க வேண்டும் என்பதற்காகவே போராடி கொண்டு இருக்கின்றோம் சாக்கு போக்கு கூறும் அரசியல் செயற்பாடு என்னிடம் கிடையாது.

நீங்கள் அனைவரும் எனது குடும்பம் உங்களுக்கு தொடர்ந்தும் சேவைசெய்ய நான் தயாராகவுள்ளேன். ஆகவே எனது குடும்பம் கஷ்டப்படுவதை பார்த்து கொண்டிருக்க எனக்கு விருப்பமில்லை. பல்கலைக்கழகம் என்பது ஒரு நாளில் அமைக்கமுடியாது முதலில் உயர்கல்வி நிலையமாக இருந்து அதன்பிறகுதான் பல்கலைக்கழகமாக மாற்றம் பெறும்.

மலையக மக்களின் வறுமை நிலை 2020 இல் 23 சதவீதமாகவும் 2023ஆம் ஆண்டு 57 சதவீதமாகவும் காணப்பட்டது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பது 87 வருட வரலாற்றை கொண்டது. அதில் 30 வருடங்கள் நாட்டில் யுத்தம் நடந்தது.

இதன்போது நுவரெலியா மாவட்ட மக்களை பாதுகாத்தது இ.தொ.கா என்பது தான் வரலாறு வவுனியாவில் இடம்பெயர்ந்து மலையக மக்கள் அங்கு ஒரு கஷ்டமான நிலையில் வாழ்கின்றார்கள்.

அவர்களின் நிலை இங்குள்ள வேறு அரசியல்வாதிகளின் கண்களுக்கு தெரிவதில்லை. கொரோனா காலப்பகுதியில் தோட்ட தொழிலாளர்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கப்பட்டதோ இல்லையோ தோட்ட முகாமையாளர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டது.

கடந்த 76 வருடங்களாக ஒரு தீர்க்கமான பொருளாதார கட்டமைப்பு எம்மிடம் இல்லை அரசாங்கத்தின் வருமானம் அதிகரிக்கவில்லை. ஆனால் செலவு அதிகரித்தமையால் நாட்டில் பொருளாதார பிரச்சினை ஏற்பட்டதாக அவர் தெரிவித்தார்.

## காணாமல் போன நான்கு பாடசாலை மாணவர்களும் ராகமையில் கண்டுபிடிப்பு

(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)

நுவரெலியா, நோர்வூட் வென்சர் தோட்டத்தில் வசிக்கும் நான்கு பாடசாலை மாணவர்கள் கடந்த 04 ஆம் திகதியிலிருந்து காணாமல் போயிருந்தனர். இந்நிலையில் ராகம பிரதேசத்தில் வைத்து இவர்கள் நேற்றைய தினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தரம் 10 இல் கல்வி கற்கும் 15 வயதுடைய நான்கு பாடசாலை மாணவர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

இதுதொடர்பில் தெரியவருவதாவது, மாணவர்கள் நால்வரும் கடந்த 04 ஆம் திகதி புதன்கிழமை வீட்டிலிருந்து வெளியே சென்றுள்ளனர். காணாமல் போன மாணவர்களின் பெற்றோர்கள் இதுதொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளனர்.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் காணாமல் போன மாணவர்கள் நால்வரும் ராகம பிரதேசத்தில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் நால்வரும் வேலை வாய்ப்பு தேடி ராகம பிரதேசத்திற்குச் சென்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, மாணவர்கள் நால்வரும் ராகம பொலிஸாரால் அவர்களது பெற்றோர்களிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.



தமிழ்நாடு கோவை மாநகர் வடபள்ளி பிரதேசத்தில் நடைபெற்ற திராவிட முன்னேற்ற கழகத்தின் பொது உறுப்பினர் மாநாட்டில் அழைப்பின் பேரில் கலந்துகொண்ட தேசிய தமிழ் மக்கள் முன்னணியின் தலைவர் ஆ. கமலானந்தன் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். அதேவேளை தேசிய தமிழ் மக்கள் முன்னணியின் தலைவர் ஆ. கமலானந்தனால் தழிழ்நாடு மக்களவை எம்.பி.கணபதி ராஜ்குமாருக்கு நினைவு பரிசும் வழங்கப்பட்டது. (படம்: தலவாக்கலை குறூப் நிருபர்)

## புசல்லாவை நிவ் பீகொக் சமூக அபிவிருத்தி மன்றம் உதயம்

புசல்லாவை நிவ் பீகொக் தோட்ட மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வை பெற்றுக் கொடுப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்வதற்கான புதிய மன்றம் உதயமானது.

நிவ் பீகொக் சமூக அபிவிருத்தி மன்றம் என்ற பெயரில் உதயமான இவ்வமைப்பை ஸ்தாபிப்பதற்கான பொதுக் கூட்டம் அண்மையில் நிவ் பீகொக் தோட்டத்தில் நடைபெற்றது. இதன்போது சமூக அபிவிருத்தி மன்றத்துக்கான புதிய நிர்வாகக்குழு தெரிவு செய்யப்பட்டது. இவ்வமைப்பின் தலைவராக எம்.விஜயக்குமார் தெரிவு செய்யப்பட்டார்.



செயலாளராக வி.விஜயதர்ஷினி தெரிவானார். பொருளாளராக கே.சரத்குமாரும் உபதலைவராக எஸ். சசிகுமாரும் உப செயலாளராக பி.பவாணியும் தெரிவு செய்யப்பட்டதோடு மன்றத்தின் செயற்குழு உறுப்பினர்களாக கே.பிரகாஷ், பி.விஜேந்திரகுமார், கே.பாலக்கிருஷ்ணன், எல். கோகிலவேணி, டி.திலகேஸ்வரி, பி. சரோஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மலையக நட்சத்திரக் கலைப்பேரவையின் ஏற்பாட்டில் கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையில் இச்சமூக அபிவிருத்தி மன்றம் தாபிக்கப்பட்டுள்ளது.

மலையக பெருந்தோட்டப் பொது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இனங்காணப்பட்டு அப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கான அணுகுமுறைகள் வடிவமைக்கப்பட்டு அவை செயலுருவாக்கம் பெறவிருப்பதாகவும் இன மத சாதி அடிப்படையில் அன்றி சகலரும் நன்மையடையக்கூடிய வகையில் இதன் செயற்பாடுகள் அமையவிருப்பதாகவும் மலையக நட்சத்திரக் கலைப் பேரவையின் தலைவர் மலையக வாசுதேவன் தெரிவித்தார்.



## கொட்டகலையில் ஆயுர்வேத மருத்துவ முகாம்

கெயார் லங்கா அறக்கட்டளையின் இரண்டாம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு இலவச ஆயுர்வேத மருத்துவ முகாம் கொட்டக்கலை, கெலிவத்தை தோட்டப்பகுதியில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது கெயார் லங்கா அறக்கட்டளையின் ஸ்தாபக பணிப்பாளர் அர்ச்சுனி, பணிப்பாளர் டொக்டர். ரமேஸ்குமார், உறுப்பினர்களான இளையராஜா மற்றும் பிளசீனா, தோட்ட முகாமையாளர் மற்றும் 200ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

(படம்: பொகவந்தலாவ நிருபர்)

## பிரம்மாண்ட விநாயகர் சதுர்த்தி பெருவிழா

(தலவாக்கலை குறூப் நிருபர்)

விநாயகர் சதுர்த்தி பெருவிழா கொட்டகலை நகரில் எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ளது. எழில் கொஞ்சும் மலையக மண்ணில், அருள்மிகு விநாயகப்பெருமானுக்கு ஆவணி மாத சதுர்த்தி பெருவிழா, இதுவரை கண்டிராத பிரம்மாண்டமான முறையில் கொண்டாட திட்டமிடப்பட்டுள்ளது. பத்து இடங்களிலிருந்து விநாயகர் சிலைகள் கொண்டு வரப்படவுள்ளது. அந்தவகையில் பெரிய மண்வெட்டி தோட்டம், சின்ன மண்வெட்டி தோட்டம், ரொசிட்டா தோட்டம், ஸ்டோனி கிளிப் தோட்டம், ஹறிங்டன் தோட்டம், வூட்டன் தோட்டம், லொக்கில், பளிங்கு மலை தோட்டம், கல்கந்த தோட்டம் கொமர்சல் ஆகிய இடங்களிலிருந்து சிலைகள் கொண்டுவரப்படவுள்ளன. எதிர்வரும் 08 ஆம் திகதி அன்று பகல் 1 மணி முதல் 4 மணிக்குள் பெரிய மண்வெட்டி தோட்ட ஆலய முன்றலிருந்து ஆரம்பித்து (கொட்டகலை பிரதேச சபைக்கு அருகில்) விநாயகர் சிலைகள் ஊர்வலமாக கொண்டு வரப்படவுள்ளன.

கொட்டகலை வாவியில் கரைத்தல் செய்யப்படும். பக்தகோடி பெருமக்கள் வருகை தந்து, விநாயக பெருமானை தரிசித்து, எல்லா நலன்களையும் வளங்களையும் பெற ஏற்பாடு குழு அழைப்பு விடுத்துள்ளது.

# வடக்கின் உதயம்

## ஒரே இரவில் மூன்று வீடுகள் உடைத்து திருட்டு; சங்கானை பகுதியில் சம்பவம்

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் சங்கானை பகுதியில் ஒரே இரவில் மூன்று வீடுகள் உடைத்து, பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

சங்கானை தேவாலய வீதியிலுள்ள மூன்று வீடுகள் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு 11 மணியளவில் உடைக்கப்பட்டு வீட்டிலிருந்த பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினரால், மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், கொள்ளை சம்பவத்துடன் தொடர்புடையவர் என பெயர் குறிப்பிட்டு சந்தேகநபரொருவர் தொடர்பான பல தகவல்களையும் பாதிக்கப்பட்ட தரப்பினர் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

பருத்தித்துறை கடற்பரப்பில்

## கைதான இந்திய மீனவர்கள் 11 பேரும் நிபந்தனை அடிப்படையில் விடுதலை

(நாகர்கோவில் விஷேட நிருபர்)

பருத்தித்துறை கடற்பரப்பில் கைதான இந்திய மீனவர்கள் 11 பேரையும் நிபந்தனை அடிப்படையில் விடுவிப்பதாக பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை உத்தரவிட்டுள்ளார்.



கடந்த ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட நாகபட்டிணம் மாவட்ட மீனவர்கள் 11 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்று வெள்ளிக்கிழமை (06) பருத்தித்துறை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டபோது 11 பேரும் நிபந்தனை அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வழக்கை விசாரணை செய்த நீதவான் கிரிசாந்தன் பொன்னுத்துரை மீனவர்கள் 11 பேரையும் மூன்று குற்றச்சாட்டுகளின் கீழ் தலா மூன்று மாத சாதாரண சிறைத் தண்டணை விதித்து அதை 10 வருடங்களுக்கு ஒத்தி வைத்து நிபந்தனையின் அடிப்படையில் விடுவிக்க உத்தரவிட்டார்.

## வவுனியாவில் தேசிய மக்கள் சக்தியின் பிரசாரக்கூட்டம்

(வவுனியா விசேட நிருபர்)

தேசிய மக்கள் சக்தியின் பிரசாரக்கூட்டம் வவுனியாவில் நடைபெற்றது. தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்கவின் பிரசாரக் கூட்டம் வவுனியா குருமன்காட்டு கலைமகள் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மக்கள் விடுதலை முன்னணியின் மாவட்ட அமைப்பாளர் உபாலி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார். இக்கூட்டத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் 2000ற்கும் மேற்மட்ட பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

## 'நமக்காக நாம்' தமிழ்த் தேசிய பொதுக் கூட்டமைப்பினரின் பரப்புரை நடவடிக்கை

(யாழ். விசேட நிருபர்)



பொலிகண்டி முதல் பொத்துவில் வரை முன்னெடுக்கப்பட்டு வரும் 'நமக்காக நாம்' பிரசார பயணத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலைய பகுதியில் தமிழ்த் தேசிய பொதுக்கூட்டமைப்பினர் பரப்புரை நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இந்த பரப்புரை நடவடிக்கையில் தமிழ்த் தேசிய பொதுக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசிய கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள், மாகாணசபை முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

## தன்னை கருணை கொலை செய்யுமாறு கோரிய முதியவர் அரச முதியோர் இல்லத்தில் சேர்ப்பு

(யாழ். விசேட நிருபர்)

தன்னை கருணை கொலை செய்யுமாறு கோரிய முதியவர் கைதடி அரச முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒரு காலை இழந்த முதியவர் ஒருவர் கடந்த சில வாரங்களாக நோய் வாய்ப்பட்ட நிலையில், அவரை பராமரிக்க ஆட்களின்றி மானிப்பாய் பகுதியிலுள்ள சனசமூக நிலையமொன்றில் தஞ்சமடைந்தார்.

அவரை ஊரவர்கள் முதியோர் இல்லத்தில் சேர்க்க முயற்சிகளை முன்னெடுத்த வேளை, அவரை பராமரிப்பதில் உள்ள நடைமுறை சிக்கல்கள் உள்ளிட்ட சில காரணங்களால் இல்லங்கள் பொறுப்பேற்க மறுத்துள்ளன.

இதனால் விரக்தியடைந்த முதியவர் தன்னை கருணை கொலை செய்யுமாறு, வடமாகாண ஆளுநர் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் ஆகியோரிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில் யாழ்ப்பாண பிரதேச செயலாளர் உள்ளிட்ட தரப்பினர் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்து, கைதடியிலுள்ள அரச முதியோர் இல்லத்தில் தற்போது குறித்த முதியவரை இணைத்துள்ளனர்.

## சர்வதேச திரைப்பட விழாவில் கைகலப்பு

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சர்வதேச திரைப்பட விழாவில் கலந்துகொள்ள வந்தவர்களுடன் குழப்பத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நான்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வரும் சர்வதேச திரைப்பட விழாவின் ஒரு அங்கமாக யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கிலும் திரைப்பட திரையிடல்கள் நடைபெறுகின்றன.

திரைப்படங்களை பார்வையிட வந்தவர்களுடன் முரண்பட்ட குற்றச்சாட்டில் நான்கு மாணவர்களுக்கும் வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது. அதேவேளை கடந்த வருடம் நடைபெற்ற திரைப்பட விழாவிலும், கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற திரையிடலை பார்வையிட காற்சட்டைகளுடன் வந்தவர்களை பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பல்கலைக்கழகத்தினுள் நுழைய அனுமதி மறுத்திருந்தனர்.

அதனால் திரைப்படத்தை பார்வையிட வந்தவர்கள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் முரண்பட்டு, அவற்றை காணொளியாக பதிவு செய்து சமூக வலைத்தளங்களில் பகிர்ந்தமையால், அவை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை விமானப்படைக்கு அமெரிக்கா வழங்கிய விமானம் அடுத்த வாரம் வந்தடையும்



இலங்கை விமானப்படைக்கு அமெரிக்காவினால் நன்கொடையாக வழங்கப்பட்ட *Beechcraft King Air 360ER* விமானமானது அடுத்த வாரம் இலங்கையை வந்தடையும் என இலங்கை அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள், போதைப்பொருள் தடுப்பு மற்றும் கடத்தல் மற்றும் கள்ளக்கடத்தலை முறியடித்தல் ஆகிய விடயங்களில் இலங்கையின் திறன்களை அதிகரிக்கும் வகையில் மேம்படுத்தப்பட்ட இந்த விமானம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்நன்கொடையானது அமெரிக்க இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் அதே வேளை இந்நாட்டின் கடல்சார் கண்காணிப்பு நடவடிக்கைகளையும் இது கணிசமாக மேம்படுத்தும்.

இலங்கை விமானப்படைக்கு எவ்வித செலவுகளுமின்றி, அமெரிக்க அரசினால் வழங்கப்படும் 19 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியுடைய இம்மானியமானது, விமானம் மற்றும் அதற்கு தேவையான உதவிச் சேவைகள் ஆகியவற்றை உள்ளடக்குகிறது.


இவ்விமானமானது, அது தொடர்பான அறிமுகம் மற்றும் அதை இயக்குவது தொடர்பான பயிற்சி என்பன நிறைவடைந்த பின்னர், இவ்வாண்டின் பிற்பகுதியில் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக, இலங்கை அதிகாரிகள் இவ்விமானத்தை இயக்குவதற்கும் பராமரிப்பதற்கும் முழுமையாகத் தயாராகவிருப்பதை உறுதி செய்வதற்காக அமெரிக்க அதிகாரிகள் மூன்று மாதகால பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றை நடத்துவார்கள்.

*Beechcraft Textron Aviation* நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டின் இறுதியில் தயாரிப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்ட இவ்விமானமானது, 2024 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இறுதி செய்யப்பட்ட ரேடார் மற்றும் புகைப்படக் கருவிகள் போன்ற கடல்சார் ரோந்துப் பணிக்கு தேவையான உணரிகளை நிறுவுதல் உட்பட மேலதிக மேம்படுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டது.

அடுத்த வாரம் வருகைதருமென எதிர்பார்க்கப்படும் விமானத்தின் வருகைக்குத் தயாராவதற்காக 2024 ஜூன் முதல் ஒகஸ்ட் மாதம் வரை, கன்சாஸ் மற்றும் புளோரிடாவில் இடம்பெற்ற பயிற்சிகளில் இலங்கை விமானப்படை அதிகாரிகள் பங்கேற்றனர்.

இலங்கையை வந்தடைந்ததும், திருகோணமலை சீனக்குடாவிலுள்ள *Maritime Patrol Squadron 3* உடன் இணைந்து கொள்வதற்கு முன்பாக இவ்விமானமானது, இரத்மலானையிலுள்ள விமானப் படைத் தளத்தில் மேலதிக பயிற்சி மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவற்றுக்குட்படும்.

## நகர்வலம்







சக்தி தொலைக்காட்சியின் தயாரிப்பில் இளம் பாடகர்களை இனம் கண்டு அவர்களின் திறமைகளை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சியில் சக்தி கிரவுன் ஆக பேராதனைப் பல்லைக் கழக கலைப்பிரிவில் பயிலும் மாணவி செல்வி பிரனவி தெரிவு செய்யப்பட்டுள்ளார். இறுதிப் போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்ட 6 போட்டியாளர்களும் தமது இசைப்பயணத்தை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச்செல்லும் விதமாக நேற்று முன்தினம் (5) M Entertainments நிறுவனத்துடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

(படங்கள்: தெஹிவளை, கல்கிசை விசேட நிருபர்)

# யுக்திய நடவடிக்கையில் 736 சந்தேகநபர்கள் கைது

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் யுக்திய விஷேட சோதனை நடவடிக்கைகளின் போது, நேற்று மாத்திரம் 736 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 719 ஆண்களும் 17 பெண்களும் அடங்குவதாக தெரிவிக்கும் பொலிஸார் அனைவரும் போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புயையவர்கள் எனவும் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களில் 10 பேர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், போதைப்பொருட்களுக்கு அடிமையாகியுள்ள 05 பேரை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களிடமிருந்து 185 கிராம் 573 மில்லிகிராம் ஹெரோயின், 337 கிராம் 835 மில்லி கிராம் ஐஸ், 273 போதை மாத்திரைகள் மற்றும் 1,716 கிராம் 947 மில்லி கிராம் கஞ்சா ஆகிய போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

### ஹேனேகமையில்

# போலி நாணயத்தாள்களை வைத்திருந்த பெண் கைது

62 போலி 5000 ரூபா நாணயத்தாள்களை வைத்திருந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 44 வயதுடைய ஹேனேகம, அக்குரஸ்ஸ பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

நேற்றுமுன்தினம் தெமட்டகொட பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வேலுவன வீதி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பொலிஸாரின் விசேட தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெமட்டகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




தமிழ்நாடு, சென்னை நகரில் இயங்கும், சங்கநாத இணைய வானொலியின் மூன்றாவது வருடபூர்த்தி விழா அண்மையில் சென்னையில் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில், கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். இதன்போது எடுக்கப்பட்ட படம்.

# சிறுபோக விவசாய முன்னேற்றம் தொடர்பில் விவசாய அபிவிருத்தி

(திறப்பனை தினகரன் நிருபர்)

அநுராதபுரம் மாவட்டத்தின் விவசாய அபிவிருத்தி தொடர்பிலான கலந்துரையாடலொன்று அநுராதபுர மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட விவசாய குழு தலைவர் மாவட்ட செயலாளர் ரஞ்சித் விமலசூரிய தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

விவசாயத்துறையில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் சிறுபோக விவசாய பயிர்களின் முன்னேற்றம் தொடர்பில் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது.

நெல் உற்பத்தியில் ஈடுபடும் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டம் தொடர்பான விடயங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டு தேவையான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இதன்படி இவ்வருடத்திற்கான நெல் உற்பத்தி இலக்கு 108,890 ஹெக்டேயர் என தெரிவிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக அநுராதபுரம் மாவட்டத்தின் சுஹுரு வீடமைப்பு திட்டத்திற்கு 18 மில்லியன் ரூபா கிடைத்துள்ளதுடன் இதில் வீடுகளை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

2023 ஆம் ஆண்டுக்கான விவசாய பயிர் சேதத்திற்கான நட்டஈடாக 1647 விவசாயிகளுக்கு 29,240,915 ரூபாவை விவசாய காப்புறுதி சபை வழங்கியுள்ளது. மேலும், 202223 பருவத்திற்கான இழப்பீடாக வழங்கப்பட்ட தொகை 243,423,966 ரூபாவாகும். இது 12766 விவசாயிகளுக்கானது.

மகாவலி எச் வலயத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான பருவத்தில் 4332 ஹெக்டேயர் நெல் பயிரிடப்பட்டுள்ளது. அத்துடன் மிளகாய் விதைகள் உற்பத்தி, முட்டை உற்பத்திக்கு குஞ்சுகள் வழங்குதல் மற்றும் கரவை மாடுகளின் வளர்ச்சி என்பன பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

'மகாவலி 'எச்' வலயத்தில் 18,977 ஹெக்டேயர் காணியில் நெல் மற்றும் மேலதிக பயிர் உற்பத்தியும் இடம் பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் மேலதிக மாவட்ட செயலாளர் சந்தியா அபேசேகர, உதவி மாவட்ட செயலாளர் பிரசன்ன யசரத்ன, அனைத்து பிரதேச செயலாளர்கள், வலய நீர்ப்பாசன பணிப்பாளர் எச்.ஏ.ஜயந்த டி சில்வா, விவசாய குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்களின் தலைவர்கள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.









உடப்பு திரௌபதியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு அம்பாளுக்கு எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வுகள் (6) நடைபெற்றது. பக்தர்கள் பலர் வந்து அம்பாளுக்கு எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (படங்கள்: உடப்பு குறூப் நிருபர்)

# ஐக்கிய தேசிய கட்சியின் 78ஆவது ஆண்டுவிழா











ஐக்கிய தேசிய கட்சியின் 78ஆவது ஆண்டுவிழா கட்சி தலைமையகமான ஸ்ரீ கொத்தவில் நேற்று நடைபெற்றது. ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன, உப தலைவர் அக்கில விராஜ் காரியவசம், பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, தேசிய செயலாளர் ரவி கருணாநாயக்க, பொருளாளர் பெரோஸ், முன்னாள் அமைச்சர் ஜோன் அமரதுங்க, அமைச்சர் சுனேத்திரா ரணசிங்க, நிறைவேற்றுப் பணிப்பாளர் ஷமல் செனரத் உட்பட பலர் கலந்து கொண்டனர். படம் - எம். நஸார்

# ஒருதொகை பீடி இலைகள் மீட்பு

(கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்)



சிலாபம் மயிலம்குளம் களப்பு பகுதியிலிருந்து ஒருதொகை பீடி இலைகள் நேற்றுமுன்தினம் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேற்கு கடற்படை கட்டளையின் ரங்கல கடற்படையினர் சிலாபம் களப்பு பிரதேசத்திலுள்ள காட்டுப் பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

குறித்த களப்பு பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 28 உரமூடைகளை கைப்பற்றிய கடற்படையினர் அதனை சோதனை செய்தனர்.

இதன்போது குறித்த 28 உரமூடைகளிலிருந்து 843 கிலோ 950 கிராம் பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் குறித்த பீடி இலைகள் அடங்கிய உரமூடைகளுடன், அமோனியம் காபனட் எனும் இரசாயன திரவப்பொருள் 25 கிலோ கிராம் அடங்கிய மூடையொன்றும் இதன்போது மீட்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் குறிப்பிட்டனர்.

குறித்த பீடி இலைகளை கடல் மார்க்கமாக இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் விற்பனை செய்யும் நோக்கில் இவ்வாறு எடுத்து வந்திருக்கலாம் எனவும் கடற்படையினரின் கெடுபிடிகளால் சந்தேகநபர்கள் பீடி இலைகள் அடங்கிய உரமூடைகளை களப்பு பகுதிகளில் கைவிட்டு விட்டு தப்பிச் சென்றிருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக கடற்படையினர் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கடற்படையினரால், கைப்பற்றப்பட்ட 843 கிலோ 950 கிராம் பீடி இலைகள் மற்றும் 25 கிலோ கிராம் அடங்கிய அமோனியம் காபனட் இரசாயன பொருள் அடங்கிய உரமூடை என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கலால் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளதாகவும் கடற்படையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.




# Tata Motors GenVoltz ஜெனரேட்டர்களை சந்தையில் அறிமுகப்படுத்தும் DIMO



இலங்கையின் முன்னணியில் உள்ள பல்வகைத்துறை கூட்டு நிறுவனமான DIMO, இலங்கைச் சந்தையில் Tata Motors GenVoltz ஜெனரேட்டர்களை அண்மையில் அறிமுகப்படுத்தியது.

25kVA, 30kVA, 35kVA, 40kVA, 50kVA, 62.5kVA, 82.5kVA, 100kVA, 125kVA மாதிரிகளில் அமைந்த GenVoltz மின்பிறப்பாக்கிகள் (ஜெனரேட்டர்கள்), கட்டடங்களின் பராமரிப்பு சேவைகள், சுகாதார சேவைகள், சுற்றுலா, தொழில்நுட்பம் போன்ற சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்களின் மின்சக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவும் தயாரிப்பாகும். இந்த மின்பிறப்பாக்கிகளின் விசேட செயல்திறன் மற்றும் எரிபொருள் திறன் ஆகியன, அவற்றின் நீண்ட ஆயுளை உறுதி செய்வதோடு தடையின்றிய மின்சாரம் அவசியமான வணிகங்களுக்கு சிறந்த தெரிவாக அமைகின்றன. இந்த அறிமுகம் குறித்து கருத்துத் தெரிவித்த DIMO நிறுவனத்தின் பிரதம செயற்பாட்டு அதிகாரி (வாகன பொறியியல் தீர்வுகள்) மஹேஷ் கருணாரத்ன தெரிவிக்கையில், "அண்மையில் ஏற்பட்ட மின்சக்தி நெருக்கடியைத் தொடர்ந்து நம்பகமான மேலதிக மின்சக்தித் தீர்வுகளுக்கான தேவை சந்தையில் அதிகரித்துள்ளது. அந்தத் தேவையை மையமாகக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்ட தீர்வே இந்த ஜெனரேட்டர்களாகும். Tata Motors நிறுவனத்தின் மேம்பட்ட பொறியியல் தொழில்நுட்பத்துடனும், DIMO நிறுவனத்தின் ஒப்பிட முடியாத விற்பனைக்குப் பின்னரான சேவைகளுடன் சந்தைக்கு வரும் Tata Motors GenVoltz ஜெனரேட்டர்கள், நாட்டின் மின் உற்பத்தித் துறைக்கு புதிய ஆற்றலை சேர்க்கிறது." என்றார்.




# 'Buy Now, Pay Later' சலுகையை வழங்க DFCC – Mintpay புத்தாக்க கூட்டாண்மை



இலங்கையில் டிஜிட்டல் நிதியியல் சேவைகளை வழங்குவதில் முன்னோடியான DFCC வங்கி, நாட்டிலுள்ள முதன்மை நிதியியல் செயலியான (app), Mintpay உடன் மூலோபாய கூட்டாண்மையொன்றை முன்னெடுப்பது குறித்து அறிவித்துள்ளது. இக்கூட்டாண்மை மூலமாக, சந்தையில் பொதுவாகப் பெற்றுக்கொள்ள முடியாத ஒரு வசதியாகக் காணப்படுகின்ற "BuyNowPayLater" (BNPL) மற்றும் "Pay Now" போன்ற தனித்துவமான கொடுப்பனவுத் தெரிவுகள் டெபிட் அட்டைதாரர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. DFCC வங்கியின் இணைய வழி கொடுப்பனவு நுழைமுகத்தை Mintpay உடன் ஒருங்கிணைப்பதன் மூலமாக, டெபிட் அட்டைதாரர்கள் அனைவருக்கும் நிதியியல் நெகிழ்திறனை மேம்படுத்தி, நிதித் துறையில் புரட்சிகரமான மாற்றத்திற்கு நாம் வழிகோலவுள்ளோம்.

DFCC வங்கி தனது டெபிட் அட்டைதாரர்களுக்கு BNPL க்கான கவர்ச்சிகரமான தெரிவுகளை வழங்கும் அதேசமயம், வங்கியின் இணையவழி கொடுப்பனவு நுழைமுகம் மற்றும் அவற்றை ஏற்றுக்கொள்ளும் விரிவான வலையமைப்பின் அனுகூலத்தின் பயனை Mintpay அனுபவிக்கும். அந்த வகையில், எந்தவொரு டெபிட் அட்டைதாரரும் தற்போது "Pay Now" அல்லது "BNPL" தெரிவைக் கொண்டிருப்பதுடன், Mintpay மூலமாக இணையவழி மற்றும் விற்பனை மையங்களில் தாம் மேற்கொள்கின்ற கொள்வனவுக்கு செலவிடுகின்ற தொகையை வட்டியின்றிய, மூன்று தவணைக் கொடுப்பனவுகளாக செலுத்த முடியும்.

தமது வாடிக்கையாளர்கள் மத்தியில் பரிணாம மாற்றம் கண்டு வருகின்ற தேவைகளை பூர்த்தி செய்து, எந்தவொரு அட்டைதாரருக்கும் தமது விருப்பத்திற்கமைவாக, சௌகரியமான கொடுப்பனவுத் தீர்வுகளை வழங்குவதில் DFCC வங்கி காண்பிக்கும் அர்ப்பணிப்பை இந்த நெகிழ்தன்மை பிரதிபலிக்கின்றது.

# புனானை பல்கலைக்கழக வளாகத்தில் அமானா சுய வங்கிச் சேவை நிலையம்




மாணவர்களுக்கு தாங்கிக் கொள்ளக்கூடிய கல்விசார் நிதிவசதிகளை பெற்றுக் கொடுப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது.

அமானா வங்கி தனது 30 ஆவது சுய வங்கி நிலையத்தை, மட்டக்களப்பு, புனானை International Campus of Science & Technology (ICST) பல்கலைக்கழக பூங்கா வளாகத்தில் திறந்துள்ளது. இந்நிகழ்வில் வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹமட் அஸ்மீர், பிரதம இடர் அதிகாரி எம்.எம்.எஸ். குவிலித், நுகர்வோர் வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் உப தலைவர் சித்தீக் அக்பர் ஆகியோருடன், பல்கலைக்கழக ஸ்தாபகர் கலாநிதி. எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ், தவிசாளர் பொறியியலாளர் எம்.எச்.ஏ. ஹிராஸ், உப வேந்தர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்னசேகர, பல்கலைக்கழக நிர்வாகம், கல்விசார் ஊழியர்கள், மாணவர்கள், உள்ளூராட்சி அதிகார தரப்பினர் மற்றும் பிராந்தியத்தின் இதர பிரதான பங்காளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கு சௌகரியமான அணுகலை வழங்கும் வகையில் அமைந்துள்ள இந்த சுய வங்கிச் சேவை நிலையம், 24/7 நேரமும் பண மீளப் பெறுகைகள், பண வைப்புகள் மற்றும் கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகள் ஆகியவற்றை மேற்கொள்ளும் வசதியை வழங்கும்.

இந்த நிலையத்தின் திறப்பு விழாவின் போது, பல்கலைக்கழகத்துடன் வங்கி புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்தது. அதனூடாக, மாணவர்களுக்கு வங்கியின் மக்களுக்கு நட்பான மற்றும் சகாயமான நிதி வசதிகளை தமது உயர் கல்வி கற்கைகளை தொடர்வதற்காக கல்விசார் நிதியளிப்பு வசதிகளை வழங்க முன்வந்துள்ளது.

# முறைகேடான இறக்குமதிகள் மூலம் வரி மற்றும் பொருளாதார பாதிப்புகள்



அங்கீகரிக்கப்படாத உத்தியோகபூர்வமற்ற சந்தை இறக்குமதிகள் காரணமாக இலங்கையின் வரி வருவாயில் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறைந்த விலையில் கிடைக்கும் பொருட்கள் நுகர்வோரிடையே தவறான ஆர்வத்தை ஏற்படுத்துவதுடன், நாட்டின் பொருளாதார நிலைபேறானதன்மை மற்றும் நுகர்வோர் பாதுகாப்புக்கான ஆபத்துகளை உருவாக்குகின்றன. வர்த்தக முத்திரை உரிமையாளர்களின் அனுமதியின்றி இறக்குமதி செய்யப்படும் தயாரிப்புகளை உத்தியோகபூர்வமற்ற சந்தை அல்லது இணையான இறக்குமதி எனக் குறிப்பிடுகிறோம்.

இவை வரி வருவாய் மற்றும் அந்நியச் செலாவணியில் கணிசமான இழப்புகளை ஏற்படுத்துகின்றன.

இதனால் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் தங்களுடைய நிலைப்பாட்டைத் தக்கவைக்க சிரமங்களை சந்திக்கிறார்கள். நாட்டின் நிதி ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்கும், நியாயமான சந்தையை உறுதி செய்வதற்கும், இணையான இறக்குமதி சந்தை நடவடிக்கைகளை கட்டுப்படுத்த அவசர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது என்றும், அரசாங்கம் உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இதனால், பொருளாதாரத்தை மீளெழுப்புவதும், நிலைத்தன்மை வாய்ந்த பொருளாதாரத்தை உருவாக்குவதும், நீண்ட காலத்தில் பொருளாதாரத்திற்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை சமாளிக்க முடியும்.

# சிறந்த விற்பனை அதிகாரிகளை கௌரவித்த செலிங்கோ லைஃப்



இலங்கை ஆயுள் காப்புறுதி சந்தையின் முன்னணி நிறுவனமான செலிங்கோ லைஃப் 2024 ஆம் ஆண்டில் சிறந்த விற்பனை செயல்திறனை பதிவு செய்த சிறந்த ஆயுள் காப்புறுதி விற்பனை பிரதிநிதிகளை ஊக்குவிக்கும் வகையில் அரையாண்டு விருதுகள் வழங்கும் நிகழ்வினை நடத்தியது.

ஷங்ரிலா ஹம்பாந்தோட்டை ஹோட்டலில் 'மகத்துவத்திற்கான பாதை' என்ற பொருத்தமான தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 230 செலிங்கோ லைஃப் விற்பனை அதிகாரிகள் விருதுகளைப் பெற்றுக் கொண்டனர். அத்துடன் முதல் அரையாண்டில் அவர்களின் விற்பனை சாதனைகளை அங்கீகரிப்பதற்காகவும், ஆண்டின் பிற்பகுதியில் அந்த வேகத்தை மேலும் ஊக்குவிக்கும் பொருட்டும் இந்த சொகுசான ஹோட்டலில் அவர்கள் அன்று இரவு தங்கும் வாய்ப்பினையும் பெற்றனர். நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் பணிப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்ட இந்நிகழ்வில் செலிங்கோ லைஃப் தலைவர் திரு.ஆர்.ரெங்கநாதன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில், செலிங்கோ லைஃப் நிறுவனம், வோட்டர்ஸ் எட்ஜில் நடைபெற்ற நிறுவனத்தின் வருடாந்த விருது வழங்கும் நிகழ்வில், நிறுவனமானது இலங்கையில் காப்புறுதித்துறையில் இரண்டு தசாப்தங்களாக தலைமைத்துவத்தை தக்கவைத்துள்ளதை கொண்டாடியது. இந்நிகழ்வில் சிறந்த செயல்திறன் கொண்ட 523 விற்பனை பிரதிநிதிகளுக்கு 580 விருதுகள் வழங்கப்பட்டன, இவ்விருதுகளில் நிறுவனத்தால் பராமரிக்கப்படும் மூன்று கார்கள், 82 வெளிநாட்டு சுற்றுப்பயணங்கள் மற்றும் பிற பரிசில்கள் மற்றும் கிண்ணங்கள் என்பன அடங்கும்.

# தொழில் வழிகாட்டல் அதிகாரிகளுக்கு திறன் பயிற்சியை வழங்கும் UBION, KOICA



கொரிய தொழில்நுட்பக் கல்வி (Edtech) நிறுவனமான UBION, கொரியா சர்வதேச ஒத்துழைப்பு முகவருடன் (KOICA) இணைந்து, TVET தொழில் தளத் திட்டத்தை முன்னெடுப்பதற்காக இலங்கையின் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவுடன் (TVEC) கைகோர்த்துள்ளது. இந்த முயற்சியின் நோக்கம், சர்வதேச ரீதியான சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ற வகையில் இலங்கையில் தொழில் வழிகாட்டல் அதிகாரிகளின் (CGOs) தகைமைகள் மற்றும் தொழில்முறை ரீதியான தரத்தை மேம்படுத்துவதாகும்.

அந்த வகையில், அத்துருகிரியவில் உள்ள தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தில், 2024 ஜூலை 09 முதல் 2024 ஜூலை 11 வரை, சுமார் 30 CGO அதிகாரிகளுக்கு விசேட பயிற்சி நிகழ்ச்சியொன்று நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடர்ந்து அநுராதபுரம் மற்றும் பதுளை உள்ளிட்ட இலங்கையின் பல்வேறு இடங்களில் 200 இற்கும் மேற்பட்ட CGO அதிகாரிகளுக்கு விரிவான ஆறு வார பயிற்சித் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இப்பயிற்சித் திட்டமானது, தொழில் வழிகாட்டல் பயிற்சியாளர்களுக்கான அறிமுகம் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் இடம்பெறுகின்றது. இதில், NVQ நிலை 45 தொழில் வழிகாட்டல் பயிற்சியாளர்களின், பயிற்சி உள்ளடக்கம் மற்றும் நோக்கங்களை TVEC நிறுவகத்தின் சான்றிதழ் அலுவலர்கள் விளக்குவதோடு, அது தொடர்பான விரிவான கண்ணோட்டத்தையும் வழங்குகிறார்கள். தொழில் வழிகாட்டலில் கோட்பாட்டு கட்டமைப்புகள் மற்றும் அதன் நடைமுறைப் பயன்பாடுகளை உள்ளடக்கிய ஆழமான பயிற்சியை வழங்குகின்ற மனிதவள பொது வல்லுநரான அஜித் போபிட்டியவினால் தொழில்முறை ரீதியான தொழில் வழிகாட்டல் பயிற்சி வழங்கப்படும்.

# People Development Awards 2023/24; வெள்ளி விருது பெற்ற HNBGI




இலங்கை பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தால் (SLITAD) சமீபத்தில் நடத்தப்பட்ட, மக்கள் மேம்பாட்டு விருதுகள் 2023/24 இல் (People Development Awards 2023/24) HNB பொதுக் காப்புறுதி (HNBGI) நிறுவனம் மதிப்புமிக்க வெள்ளி விருதைப் பெற்றுள்ளது. இந்த மதிப்பிற்குரிய அங்கீகாரத்தைப் பெறுவதற்காக போட்டியிட்ட வலுவான 19 நிறுவனங்களின் வரிசையில், ஒரேயொரு பொதுக் காப்புறுதி வழங்குனர் எனும் வகையில HNBGI நிறுவனம் தனித்துவம் பெறுகின்றது.

SLITAD மக்கள் மேம்பாட்டு விருதுகள் என்பது ஊழியர்களின் மேம்பாட்டில் சிறந்து விளங்கும் நிறுவனங்களைக் கொண்டாடும் ஒரு வருடாந்த நிகழ்வாகும். இது விரிவான மனித வள மேம்பாட்டு (HRD) முயற்சிகளில் மூலோபாய ரீதியாக முதலீடு செய்பவர்களை அங்கீகரிக்கிறது. உலகளாவிய மற்றும் பிராந்திய ரீதியான சிறந்த நடைமுறைகளுடன் இணைந்து, வளர்ச்சி, புத்தாக்கம், மனிதவள உத்திகளில் தொடர்ச்சியான முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் நிறுவனங்களை கௌரவிக்கும் வகையில் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

இந்த விருதுக்கான மதிப்பீட்டுச் செயன்முறையானது, வணிகம், கற்றல் செயற்பாடு மற்றும் மேம்பாடு, மக்கள் முகாமைத்துவம், தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம், முகாமைத்துவ திறன், அங்கீகாரம், வெகுமதி போன்ற பல்வேறு மூலோபாய அம்சங்களை மையமாகக் கொண்டு, மிகக் கூர்மையாகவும் விரிவாகவும் ஆராயப்பட்டு முன்னெடுக்கப்படுகின்றது. மதிப்பீட்டுச் செயன்முறையின் ஒருமைப்பாடு மற்றும் நம்பகத்தன்மையை உறுதி செய்யும் வகையில், சிரேஷ்ட கணக்காய்வாளர்களால் நடத்தப்படும் சுயாதீன கணக்காய்வு நடவடிக்கைகள் மூலம் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# Suzuki WagonR உரிமையாளர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் AMW




இலங்கையில் மோட்டார் வாகனத் துறையில் முன்னோடியாயும், Suzuki வர்த்தகநாமத்தை பிரதிபலிக்கும் ஒரே அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தருமான அசோசியேட்டட் மோட்டார்வேஸ் (பிரைவேட்) லிமிடெட் (Associated Motorways (Private) Limited) நிறுவனம், நாடு முழுவதும் உள்ள Suzuki வாகன உரிமையாளர்களைப் பாதுகாக்கும் ஒரு செயல் திட்டத்தை அண்மையில் முன்னெடுத்திருந்தது. பாதுகாப்பு தொடர்பிலான சிக்கல்களை நிவர்த்தி செய்யும் இத்திட்டத்தில், AMW நிறுவனமானது Suzuki WagonR வாகனங்களை மீள் அழைத்து இந்த சேவையை முன்னெடுத்து தவறான எரிபொருள் அளவீடுகள் மற்றும் எஞ்சின் ஸ்தம்பிதத்திற்கு வழிவகுக்கும் சிக்கல்களை சீர்செய்தது.

வாகனத்தின் instrument cluster panel இல் உள்ள துல்லியமற்ற எரிபொருள் அளவீட்டு முறை மற்றும் எரிபொருள் தாங்கியில் காணப்படும் எரிபொருள் கழிவுகளால் ஏற்படும் தடைகளை நிவர்த்தி செய்ய இம் மீள் அழைப்பு பாதுகாப்பு நடவடிக்கையானது முன்னெடுக்கப்பட்டிருந்தது. இச் சிக்கலை கவனிக்காவிடின், போதிய எரிபொருள் இன்மை தொடர்பில் ஏற்படும் எச்சரிக்கைகள் தவறாக அமைய கூடும். மேலும் இதன் விளைவாக எஞ்சின் ஸ்தம்பிதமடையும் வாய்ப்புக்கள் அதிகம். இந்த சிக்கலால் பாதிக்கப்பட்டுள்ள வாகன வகைகளாவன Suzuki WagonR Premium, Suzuki WagonR FX/FZ, Suzuki Stingray.

Suzuki WagonR உரிமையாளர்களுக்கான இந்த பாதுகாப்பு மீள் அழைப்பு திட்டமானது மிக எளிதான முறையில் AMW இனால் முன்னெடுக்கப்படுகின்றது. தற்போது வரை, 30% மீள் அழைப்பு தொடர்பான பணிகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது. இந்த செயன்முறை மிகத் திறமையான முறையில் மற்றும் எளிதான முறையில் Suzuki வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. நாடு முழுவதும் உள்ள AMW சேவை மையங்களில் அல்லது AMW இதனால் அங்கீகரிக்கப்பட்ட சேவை முகவர்களிடம் இந்த மீள அழைப்பு சேவையை பெற்று கொள்ளலாம். இந்த செயல்முறையை மேலும் எளிதாக பெற்றுக் கொள்ள, https://suzuki.lk/wagonrrecall/index.html எனும் இணையத் தளத்தினூடாக அல்லது AMW உடனடி தொலைபேசி இலக்கத்தை 0117 609 609 தொடர்பு கொண்டு வாடிக்கையாளர்கள் தங்கள் விபரங்களை பதிவு செய்து இது தொடர்பான மேலதிக தகவல்களையும் பெற்று கொள்ளலாம்.

# 3ஆவது டெஸ்டுக்கு மழை இடையூறு



இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்டது.

லண்டன், கென்னிங்டன் ஓவல் மைதானத்தில் நேற்று ஆரம்பமான இந்தப் போட்டியின் 15 ஓவர்கள் வீசப்பட்ட நிலையில் மழை குறுக்கிட்டது. இதனால் போட்டியின் பகல்போசன இடைவேளைக்குப் பின்னரும் ஆட்டம் ஆரம்பிக்கப்படவில்லை.

இதில் நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணி இங்கிலாந்தை முதலில் துப்பெடுத்தாட பணித்தது. இதன்படி களமிறங்கிய இங்கிலாந்து அணி 15 ஓவர்களுக்கு 1 விக்கெட்டை இழந்து 76 ஓட்டங்களை பெற்றிருந்தது. ஆரம்ப வீரர் டான் லோரன்ஸ் 5 ஓட்டங்களுக்கு லஹிரு குமாரவின் பந்துக்கு ஆட்டமிழந்தார். பென் டக்கட் ஆட்டமிழக்காது 51 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டியில் இலங்கை அணி இரண்டு மாற்றங்களுடன் களமிறங்கியுள்ளது. ஆரம்ப வீரர் நிஷான் மதுஷங்கவுக்கு பதில் குசல் மெண்டிஸ் அழைக்கப்பட்டிருப்பதோடு சுழற்பந்து வீச்சாளர் பிரபாத் ஜயசூரியவுக்கு பதில் வேகப்பந்து வீச்சாளர் விஷ்வ பெர்னாண்டோ இடம்பெற்றுள்ளார்.

இலங்கை அணி ஏற்கனவே டெஸ்ட் தொடரை 0–2 என இழந்திருக்கும் நிலையிலேயே இந்த டெஸ்ட் போட்டியில் களமிறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 900 கோல்கள் பெற்று ரொனால்டோ சாதனை



போர்த்துக்கல் நட்சத்திர கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ கால்பந்து உலகில் 900 கோல்களை பெற்ற முதல் வீரராக சாதனை படைத்துள்ளார்.

லிஸ்போனில் நேற்று முன்தினம் (05) நடைபெற்ற தேசிய லீக் குழு நிலைப் போட்டியில் குரோசியாவுக்கு எதிராக 34 ஆவது நிமிடத்தில் கோல் பெற்றதன் மூலமே ரொனால்டோ இந்த மைல்கல்லை எட்டினார். இந்தப் போட்டியில் போர்த்துக்கல் அணி 2–1 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

ரொனால்டோவின் இந்த கோல் அவர் போர்த்துக்கல் அணிக்காக பெறும் 131 ஆவது கோல் என்பதோடு அதிக சர்வதேச கோல்களைப் பெற்றவர் என்ற சாதனையை மேலும் நீடித்துக் கொண்டார். தவிர அவர் கழகப் போட்டியில் 769 கோல்களைப் பெற்றுள்ளார். 'இது எனக்கு பெரிய விடயமாகும்' என்று போட்டிக்குப் பின்னர் 39 வயதான ரொனால்டோ தெரிவித்தார்.

இந்த வரிசையில் ஆர்ஜன்டீனாவின் லியோனல் மெஸ்ஸி 842 கோல்களுடன் இரண்டாவது இடத்தில் இருப்பதோடு பிரேசில் கால்பந்து ஜாம்பவான் பிலே 765 கோல்களுடன் மூன்றாம் இடத்தில் காணப்படுகிறார்.

## இலங்கைக்கு எதிராக

# நியூசி. அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராகிறார் ரங்கன



இலங்கை வரும் நியூசிலாந்து அணிக்கு சுழற்பந்து பயிற்சியாளராக இலங்கையின் முன்னாள் வீரர் ரங்கன ஹேரத் இணைக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய அணி அடுத்த இரண்டு மாதங்களில் ஆசியாவில் மொத்தம் ஆறு டெஸ்ட் போட்டிகளில் ஆடவுள்ளது. இதில் ஆப்கானிஸ்தானுக்கு எதிராக இந்தியாவில் நடைபெறும் ஒரே ஒரு டெஸ்ட் போட்டி மற்றும் இலங்கையில் நடைபெறும் இரண்டு டெஸ்ட் போட்டிகளுக்காகவுமே ரங்கன ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

'அஜேய் (படேல்)இ மிட்ச் (சான்ட்னர்) மற்றும் ரச்சின் (ரவிந்திரா) ஆகிய மூன்று சுழல் வீரர்கள் இருக்கும் நிலையில் ரங்கன ஹேரத்துடன் பணியாற்றுவது துணைக் கண்டத்தில் உள்ள மூன்று டெஸ்ட் போட்டிகளுக்கும் பெரும் நன்மை தருவதாக இருக்கும்' என்று நியூசிலாந்து அணி பயிற்சியாளர் கரி ஸ்டீட் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணிக்காக 93 போட்டிகளில் 433 டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்தி இருக்கும் ரங்கன ஹேரத் அண்மைக் காலம் வரை பங்களாதேஷ் அணியின் சுழற்பந்து பயிற்சியாளராக செயற்பட்டார். நியூசிலாந்து அணியின் சுழல்பந்து வீச்சுப் பயிற்சியாளராக பாகிஸ்தானிம் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் உள்ளூர் போட்டிகளுக்கான ஆலோசகராக அவர் நியமிக்கப்பட்டதையடுத்து ரங்கன ஹேரத்தின் சேவையைப் பெற்றுக்கொள்ள நியூசிலாந்து கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

நியூசிலாந்து மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையில் காலியில் நடைபெறும் இரண்டு போட்டிகளைக் கொண்ட தொடர் எதிர்வரும் செப்டெம்பர் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

## சர்வதேச செய்திகள்



# பெரும் அழிவுக்குப் பின் ஜெனினில் இருந்து இஸ்ரேலியப் படை வாபஸ்

## காசா போர் 11ஆவது மாதத்தைத் தொட்டது

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் ஜெனின் நகரில் பெரும் அழிவுகளை ஏற்படுத்திய பின்னர் இஸ்ரேலியப் படை நேற்று அங்கிருந்து வெளியேறியுள்ளது. கடந்த பத்து நாட்களாக நீடித்த ஜெனின் நகர படை நடவடிக்கையில் 21 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

காசாவில் மோதல் நீடிப்பதோடு இஸ்ரேலின் சரமாரி தாக்குதல்கள் காரணமாக மேலும் பலர் கொல்லப்பட்டுள்ளனர். 'காசாவில் மனிதாபிமான நிலைமை பேரழிவுக்கு அப்பாற்பட்டுள்ளது' என்று ஐக்கிய நாடுகள் சபை பேச்சாளர் ஸ்டபனே டுஜரிக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஓகஸ்டில் காசாவின் தெற்கு மற்றும் மத்திய பகுதிகளில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு எந்த ஓர் உணவுப் பொருளும் கிடைக்கப்பெறவில்லை என்று நேற்று முன்தினம் செய்தியாளர் சந்திப்பில் டுஜரிக் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒக்டோபர் 07 ஆம் திகதி காசா போர் வெடித்தது தொடக்கம் அந்தப் பகுதிக்கான எல்லைகளை மூடிய இஸ்ரேல் உணவு, மருந்து உட்பட அத்தியாவசிய பொருட்கள் செல்வதை கட்டுப்படுத்தி வருகிறது.

மறுபுறம் காசாவின் தெற்கு நகரான ரபாவில் நேற்றுக் காலை இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் குறைந்தது ஆறு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்துள்ளது. அங்கிருந்து ஆறு சடலங்கள் மீட்கப்பட்டதை உள்ளூர் நிர்வாகம் உறுதி செய்ததாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கில் காசா நகரின் செய்தூன் பகுதியில் நேற்று இடம்பெற்ற மற்றொரு தாக்குதலில் குறைந்தது ஒருவர் கொல்லப்பட்டதாக அல் ஜசீரா செய்தி நிறுவனம் தெரிவித்தது. இங்கு இஸ்ரேலியப் படை கடந்த வியாழக்கிழமை இரவு தொடக்கம் தாக்குதல்களை நடத்தி வருவதோடு முந்தைய தாக்குதல்களில் அறுவர் கொல்லப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

போர் வெடித்து இன்றுடன் 11 மாதங்களை தொடுவதோடு இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 41,000ஐ நெருங்கியுள்ளது. இதில் பெரும்பாலானவர்கள் சிறுவர்கள் மற்றும் பெண்களாவர்.

காசாவில் போருக்கு மத்தியில் போலியோ தடுப்பு மருந்து வழங்கும் நடவடிக்கை தொடர்வதோடு தற்போது அது தெற்கு காசாவில் இடம்பெற்று வருகிறது. தெற்கு காசாவில் தடுப்பு மருந்து வழங்கும் பணி ஆரம்பிக்கப்பட்ட நேற்று முன்தினம் முதல் நாளில் 160,000க்கும் மேற்பட்ட சிறுவர்களுக்கு தடுப்பு மருந்து வழங்கப்பட்டது என்று பலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனினும் தெற்கு காசாவின் சில பகுதிகளில் போலியோ தடுப்பு மருந்து திட்டத்துடன் தொடர்புபட்ட மருத்துவக் குழுக்கள் செல்வதற்கு இஸ்ரேலிய இராணுவம் ஒத்துழைப்பு வழங்க மறுத்ததாக காசா சுகாதார அமைச்சு குற்றம்சாட்டியுள்ளது.

இந்தத் தடுப்பு மருந்து வழங்கும் முதல்கட்ட திட்டம் மத்திய காசாவில் முன்னெடுக்கப்பட்டதோடு அப்போது 10 வயதுக்கு உட்பட்ட 187,000க்கும் அதிகமான சிறுவர்களுக்கு தடுப்பு மருந்து வழங்கப்பட்டது. இரண்டாவது கட்டத்தில் தெற்கு காசாவில் 340,000 சிறுவர்கள் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர்.

காசாவில் போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றை எட்டுவதற்கு எகிப்து, கட்டார் மற்றும் அமெரிக்க மத்தியஸ்தர்கள் தொடர்ந்து முயன்றுவரும் நிலையில் உடன்படிக்கைக்கான 90 வீதமான விடயங்களில் இணக்கம் எட்டப்பட்டிருப்பதாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார்.



இதில் எகிப்துடனான காசாவின் தெற்கு எல்லையின் எதிர்கால பாதுகாப்பு நிலை குறித்த பிரச்சினையும் தீர்க்கப்பட வேண்டிய ஒன்றாக இருப்பாகவும் எஞ்சிய விடயங்களை தீர்ப்பதற்கு இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இணங்கி இருப்பதாகவும் பிளிங்கன் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிலடெல்பியா தாழ்வாரம் என்று அழைக்கப்படும் இஸ்ரேல் மற்றும் எகிப்து எல்லையில் தொடர்ந்து நிலைகொள்வதில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உறுதியாக இருக்கும் நிலையில் அதற்கு ஹமாஸ் மற்றும் எகிப்து எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன.

### சின்னாபின்னமான ஜெனின்

காசா போர் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையிலும் பதற்றத்தை ஏற்படுத்தி இருக்கும் நிலையில் அங்குள்ள ஜெனின் நகரில் இருந்து இஸ்ரேலிய துருப்புகள் நேற்று வாபஸ் பெற்ற பின் கட்டடங்கள் மற்றும் உட்கட்டமைப்புகளுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் சேதத்தால் குவிந்திருக்கு இடிபாடுகளை அகற்றும் பணியில் பலஸ்தீனர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் படை நடவடிக்கையில் நூற்றுக்கணக்கான இஸ்ரேலிய துருப்புகள் ஈடுபடுத்தப்பட்டதோடு ஹெலிகொப்டர்கள் மற்றும் ஆளில்லா விமானங்கள் அதே போன்று புல்டோசர்களும் பயன்படுத்தப்பட்டன. இதன்போது ஹமாஸ், இஸ்லாமிய ஜிஹாத் மற்றும் பத்தா உட்பட பலஸ்தீன போராட்ட குழுக்களுக்கும் இஸ்ரேலியப் படைக்கும் இடையே மோதல்களும் இடம்பெற்றன.

'அவர்கள் நுழைந்தபோது, புல்டோசர்களை பயன்படுத்தி அனைத்தையும் அழிக்க ஆரம்பித்தனர். எதனையும் விட்டுவைக்கவில்லை' என்று ஜெனின் குடியிருப்பாளரான சமஹர் அபூ நஸ்ஸா ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

நீர் மற்றும் மின்சார சேவைகள் தொடர்ந்து துண்டிக்கப்பட்டிருப்பதோடு இஸ்ரேலிய புல்டோசர்களால் சுமார் 20 கிலோமீற்றர் வீதிகள் தோண்டப்பட்டுள்ளன. வீதியோர குண்டு தாக்குதல்களை தடுப்பதற்கு இந்த மூலோபாயத்தை பயன்படுத்துவதாக இஸ்ரேல் கூறுகிறது. எனினும் இதனால் நகரின் மத்திய பகுதிகள் சின்னபின்னமாக்கப்பட்டுள்ளது.

இந்த மூலோபாயத்தை பயன்படுத்தி காசாவைப் போன்று மேற்குக் கரையையும் தரைமட்டமாக்க இஸ்ரேல் முயற்சிக்கிறது என்று பலஸ்தீன வெளியுறவு அமைச்சு குற்றம்சாட்டியுள்ளது.

மேற்குக் கரையின் வட பகுதியில் இருக்கும் ஜெனின் நகரம் பலஸ்தீன போராட்டக் குழுக்கள் வலுப்பெற்ற பகுதியாக பார்க்கப்படுகிறது. இஸ்ரேலிய பொதுமக்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்த திட்டமிட்ட ஈரான் ஆதரவு போராட்டக் குழு ஒன்றை முறியடிக்கும் வகையில் துல்கர்ம் நகரில் படை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது.

இந்த மோதல்களில் கொல்லப்பட்டவர்களின் உடல்கள் நேற்று அடக்கம் செய்யப்பட்டதோடு இறுதிக் கிரியையில் துப்பாக்கி ஏந்தியவர்கள் வானில் சுட்டு மரியாதை செலுத்தினர்.

ஜெனினில் இஸ்ரேலின் படை நடவடிக்கையின்போது 21 பேர் கொல்லப்பட்டனர். பெரும்பாலானவர்கள் போராட்டக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் என்றபோதும் இதில் ஜன்னல் வழியே வெளியே பார்த்தபோது இஸ்ரேலிய ஸ்னைப்பர் துப்பாக்கிதாரியால் சுட்டுக் கொல்லப்பட்ட 16 வயது சிறுமி உட்பட பொது மக்களும் உள்ளனர்.

மேற்குக் கரையில் கடந்த ஒரு வாரத்துக்கு மேல் நடத்திய இஸ்ரேலியப் படை நடவடிக்கையில் குறைந்தது 39 பேர் கொல்லப்பட்டு மேலும் 150 பேர் காயமடைந்ததாக பலஸ்தீன சுகாதார அமைச்சு குறிப்பிட்டது.

இதன்படி காசாவில் போர் வெடித்த கடந்த ஒக்டோபர் 7 தொடக்கம் மேற்குக் கரையில் இஸ்ரேலியப் படை மற்றும் இஸ்ரேலிய குடியேறிகளின் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 691 ஆக அதிகரித்துள்ளது.

# கென்ய பாடசாலையில் தீ: 17 மாணவர்கள் உயிரிழப்பு



மத்திய கென்யாவில் விடுதிப் பாடசாலை ஒன்றின் தங்குமிடத்தில் ஏற்பட்ட தீயில் குறைந்தது 17 மாணவர்கள் கொல்லப்பட்டதோடு மேலும் 13 பேர் கடும் தீக்காயத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

கியேரி பகுதியின் ஆரம்பப் பாடசாலையில் நேற்று முன்தினம் இரவு (05) இடம்பெற்ற இந்த விபத்தில் பலி எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று அச்சம் வெளியிடப்பட்டிருப்பதோடு காயமடைந்தவர்கள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்களின் வயது மற்றும் அடையாளம் தொடர்பான விபரம் உடன் வெளியாகவில்லை. எனினும் அவர்கள் சிறுவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆரம்பப் பாடசாலை 5 மற்றும் 12 வயதுக்கு இடைப்பட்ட வயதுடைய சுமார் 800 மாணவர்களை பராமரிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தீ ஏற்பட்டதற்கான காரணம் பற்றி விசாரணை நடத்தப்பட்டு வருவதோடு, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பொலிஸ் பேச்சாளர் ரெசிலா ஒனியங்கோ குறிப்பிட்டுள்ளார். 'சம்பவ இடத்தில் இருந்து மீட்கப்பட்ட உடல்கள் அடையாளம் காண முடியாத அளவுக்கு தீயில் கருகியுள்ளது' என்று ஒனியங்கோ ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

# துப்பாக்கிச் சூடு நடத்திய சிறுவனின் தந்தை கைது



அமெரிக்காவின் ஜோர்ஜிய மாநிலத்தில் தனது உயர் கல்லூரியில் நால்வரை சுட்டுக் கொன்றதாக குற்றம்சாட்டப்பட்ட 14 வயது மாணவனின் தந்தை கைது செய்யப்பட்டுள்ளார்.

54 வயதான கொலின் கிரே என்ற அந்த ஆடவர் மீது கொலை தொடர்பில் நான்கு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவரது மகன் மீதும் வயது வந்தவராகக் கருதி நிர்வாகம் நான்கு குற்றச்சாட்டுகளை பதிவு செய்துள்ளது.

தனது மகன் துப்பாக்கி வைத்திருப்பதை தந்தை தெரிந்து கொண்டே அனுமதித்திருப்பதாக ஜோர்ஜியாவின் புலன்விசாரணை பணியகத்தின் பணிப்பாளர் கிறிஸ் ஹோசி செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார். இதே நேரம் அந்த சிறுவன் துப்பாக்கிச் சூட்டுக்கு பயன்படுத்தி ஏ.ஆர்.15 ரக துப்பாக்கியை மகனின் விடுமுறை பரிசாக தந்தையே வாங்கி இருப்பதாக நம்பகமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி சி.என்.என். செய்தி வெளியிட்டுள்ளது.

அல்பச்சி உயர் பாடசாலையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டில் இரு மாணவர்கள் மற்றும் இரு ஆசிரியர்கள் கொல்லப்பட்டதோடு மேலும் ஒன்பது பேர் காயமடைந்தனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 7ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.